உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-ந.] விசுவாவசுஹு ஆடிமீ [பகுதி-கூ.

பாரதகாலமும் தமிழரும்.

செந்தமிழறிஞர்கள், தமிழ்ச்சரித்திர நுட்பங்களைப் பலபடியாகவும் இக்காலத்து ஆராய்ந்து வருகின்றனராயினும், அவ்வாராய்ச்சிகளிற் பெரும்பாலனவும் கடைச்சங்க நிகழ்ச்சியைப் பற்றியும், அதன் பிற்காலத்து நிகழ்ச்சியைப்பற்றியுமே அமைந்துள்ளன. இவற்றிற்கும் முற்பட்ட தமிழின் உண்மைநிலையைத் தெரிதற்குப் போதிய கருவிகள் இதுவரை கிடைத்தில. இறையனார் களவியலுரை முதலியவற்றில் முற்காலத்திருந்த தலையிடைச் சங்கங்களைப்பற்றிச் சிற்சில செய்திகள் தெரியவரினும், அம்மட்டோடு போதுமென அமையாது, மேலுமறிதற்கு நம்மனம் அவாவுகின்றது. யாழ்ப்பாணத்து ஸ்ரீமத். முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள், இத்தகைய சரித்திரவாராய்ச்சிபற்றி எழுதிய முகவுரை யொன்றை இங்கு எடுத்தெழுதுவதினும் சிறந்ததொன்று எமது ஞாபகத்திற்கு வரவில்லை:—
“ காலதேசங்களாற் சேய்மைக்கட்பட்ட பொருளை ஆராய்தலும் துணிதலும் அரிய கருமமாயினும் அப்பொருளை அறிதற்கே மனம் அவாவுவதாகும். ஐயாயிரம் பதினுயிரம் வருஷங்களுக்கு முற்பட்ட விஷயங்களை ஆராய்ந்து துணியுமிடத்து உளதாகும் ஆனந்தத்திற்கு உவமை பிறிதொன்றுமில்லை. தேசத்தாற் சேய்மைக்கட்பட்ட சூரியாதி கிரகங்களின் தன்மைகளை ஒருவாறு யந்திரங்களால் அறிதலும் துணிதலுங் கூடும். இறந்தகால மென்னும் பாந்ததிரையிட்டு மறைந்துபோய்ச் சேய்மைப்பட்ட விஷயங்களை அத்திரை நீக்கிக் காண்டற்கோ ஒரு கருவியையாயினும் யந்திரத்தையாயினும் காண்

ஆனல், அவருள் முடிநாகராயர் என்பார், புதியராய் நிற்றலின், அவர்யாவர்? எக்காலத்தவர்? எவ்வகையினர்? என்பன முதலிய விஷயங்களை முதலில் ஆராய்ந்து, அவர்மூலமாகப் பாரதகாலத்துத் தமிழ்மக்கள் யாவரென்றுந்தேடுவோம்.

பழைய புலவரது வரலாறுகள் சிலவற்றை ஆராய்வதற்குக் கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்டும் தொகுக்கப்பட்டுமுள்ள நூல்களே சிறந்த கருவிகளாகும். அவற்றுள்ளும் புறநானூறு சிறந்தது. அந்நூலின் இரண்டாவது செய்யுள் சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்பானை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது. இச்சேரலாதன், பாரதயுத்தத்திற் பாண்டவர் பக்கல் நின்று, அப் பெரும்போர் முடியுந்துணையும் பாண்டவசேனைக்கு உணவளிக்கும் அருஞ்செயலை மேற்கொண்டு புரிந்தவன். இக்காரணம் பற்றியே "பெருஞ்சோற்றுதியன்" என்னும் அடையுடன் வழங்கப்பட்டான். அவன் அத்தொழில் புரிந்த செய்தி,

"அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என அப்புறநானூற்றுப் பாட்டிலேயே அவ்வரசனை முடிநாகர் முன்னிலைப் படுத்துக் கூறுதலால் உணர்க. இதனல் அச்செய்யுள் பாடிய முடிநாகராயரும் அப்பாடல் பெற்ற பெருஞ்சோற்றுதியனும் ஒரே காலத்தவரென்பதும், இப்பாடல் பாரதயுத்த முடிந்த சமீபகாலத்தே பாடப்பட்டதென்பதும் இனிது விளங்கும். இவ்வுதியன் பாண்டவ சேனைக்குப் பெருஞ்சோறு கொடுத்துதவிய வரலாற்றைப் பண்டைக் காலத்துப் புலவர் சிலரும் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். இதனை,

"மறப்படைக் குதிரை மாறா மைந்திற்
றுறக்க மெய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை யிரும்பல்
கூளிச் சுற்றங் குழீஇயிருந் தாங்கு"

என மாமூலனரும், (அகநானூறு)

"ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த, சேரன்"

என இளங்கோவடிகளும் பாடியிருத்தல் காண்க. இவற்றுள், முன்னதிற் பெருஞ்சோறு கொடுத்தவன் உதியன் என்னும் பெயருடையவனே என்று விளக்கப்பட்டுள்ளது. இனி, இவ்வுதியனை முன்னிலையில் வைத்துப்பாடிய முடிநாகராயரும், தலைச்சங்கப் புலவர் வரிசையில் நூல்களிற் கூறப்படும் முடிநாகராயரும் ஒருவரே என்பதைக் காட்டற்கு, அவ்விரண்டிடங்களினும் "முரஞ்சியூர்" என ஊர் ஒன்றாயிருத்தலே தக்க சான்றாகும். அன்றியும் இம்முடிநாகர் தமிழ் நூல்களிற்காணும் புலவரெல்லாரினும் மிகப்பழமை யுடையராகத் தெரிதலால், அப்பழமையொன்றே அவரைப் பாரதகாலத்தவரென்று உறுதி கூறத்தக்கது.

மேற்குறித்த புலவரது பெயரை நோக்கின், பாரதகாலத்தில் பரதகண்டமெங்கும் பரவிப் பெருவலிபெற்ற "நாகர்" என்ற சாதியினராகத் தோற்றுகின்றார். அவ்வுத்தகாலத்தில் நாகர்கள் பரதகண்டமெங்கும் பரவியிருந்தமையும், அதன் பிற்காலத்தே அருச்சுனன்வழித்தோன்றலாகிய ஜனமேஜயன் இவர் குலத்தை வேரறுத்தமையும், மகாபாரதத்தின் சரிதநுட்பங்களாகும். இந்நாகர்கள், உண்மையிற் சருப்ப உருவமுடையர் அல்லர். இவர்கள் தங்கள் முடிமேல் ஐந்தலை முத்தலைகளையுடைய நாகவடிவமுடைய தொன்றைத் தரித்து வந்தமையால், அதுபற்றி, இவர்கட்கு நாகர் என்ற பெயர் வழங்குவதாயிற்று. இவ்வாறு முடியில் நாகவடிவினதைத் தரித்துவந்த அந்நாகரது கற்சிலைகள், பழங்காலத்தனவாக, இன்றும் வடஇந்தியாவிற் பலவிடங்களில் உள்ளன. இந்நாகரைப்பற்றித் தெரிந்தசெய்திகளை ஸ்ரீகனகசபைப்பிள்ளையவர்கள் தமது நூலிற் படத்துடன் விளக்கியிருக்கின்றார்கள். இனி, நாம் கூறிவந்த தலைச்சங்கப்புலவரும் அக்கூட்டத்தில் ஒருவரென்பதற்கு "முடிநாகராயர்" என அவர்க்கு வழங்கும்பெயரே தக்கசான்றாம். இம்முடிநாகரது வாக்காகப் புறநானூற்றிற்கண்ட பாடலால் நிலம், நீர் தீ, வளி, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களை வணங்கும் பழையவழக்கம் இவர் காலத்திருந்ததென்பதும், நான்குவேதப்பகுப்பு இவர் காலத்தே அமைந்

திருந்ததென்பதும், இமயமலைச்சாரலில் அந்தணர் பலர் வசித்தனர் என்பதும் பிறவும் அறியலாகும்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் "அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில் தலைச்சங்ககாலத் திருந்தவராக வான்மீகனார், மார்க்கண்டேயனார், கௌதமனார் இவர்களைக்கூறுகின்றார். ஆயின், இவர்களும் பாரதகாலத்தையொட்டியிருந்தவராதல் வேண்டும். இவருள் வான்மீகனார் இயற்றிய பாடலொன்று புறநானூற்று ௬௩அ - ஆம் செய்யுளாகவுள்ளது. இப்பாடல் தவத்தின் பெருமையைமட்டும் விளக்கிநிற்பது. அதுவருமாறு:—

"பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமும் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கைவிட் டனரே காதல ரதனால்
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே" என்பது.

இவ்வாறே மார்க்கண்டேயனார் பாடலொன்றும் அத்தொகை நூலின் ௬௫௩-ஆம் செய்யுளாகக் காணப்படுகின்றது. அது வருமாறு:—

"மயங்கிருங் கருவிய விசும்பு முகனாக
வியங்கிய விருசுடர் கண்ணெனப் பெயரிய
வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்
வயிரக் குறட்டின் வயங்குமணி யாத்துப்
பொன்னந் திகிரி முன்சமத் துருட்டிப்
பொருநர்க் காணாச் செருமிகு முன்பின்
முன்னோர் செல்லவும் செல்லா தின்னும்
விலைநலப் பெண்டிரிற் பலர்மீக் கூற
வுள்ளேன் வாழியர் யானெனப் பன்மா
ணிலமக ளழுத காஞ்சியு
முண்டென வுரைப்பரா லுணர்ந்திசி னோரே."

தலைச்சங்க காலத்தவராகிய மார்க்கண்டேயனாரால் ஒரு காஞ்சி நூல் இயற்றப்பட்டுள்ளதென்று தெரிகிறது. இவர்கள் நூலைத் தலையாய ஓத்தென்பர் நச்சினார்க்கினியர்.

இனி, அடுத்தவராகிய கோதமனரைக் குறித்துச் சில விஷயங்கள் அதிகமாகக் கூறலாம். புறநானூற்றில் கோதமனரென்னும் புலவர் தருமபுத்திரனைப் பாடிய பாடலொன்று ௩௬௬-ஆம் செய்யுளாகவுள்ளது. இப்பாடல் இடையிடையே சிதைந்து காணப்படுகின்றது. அப்புலவர் இப்பாடலில் தருமபுத்திரனை "அறவோன் மகனே" என விளிக்கின்றார். இங்குக் காட்டிய தருமபுத்திரன் பாண்டவர் முன்னோனேயாயின், கௌதமனர் பாரத காலத்தவராவர்; ஆயின் தலைச்சங்க காலமும் அதுவேயெனக் கூறுதல் தானே அமையும். பாரதகாலத்திலும் அதன் பிற்காலத்திலும் தமிழ்மொழி பரதகண்டமெங்கும் பரவியிருந்ததென்பதற்குச் சிலபல குறிப்புகள் காணப்படுகின்றன. ஆரியாவர்த்தத்தே தமிழின் பாகதமாகிய பாஷைகள் இன்றும் வழங்குகின்றன என்னும் பிரசித்தக் கொள்கையே இதனை வலியுறுத்தும். ஆயின், கௌதமனர் தருமபுத்திரனிடஞ் சென்று அவனைத் தமிழ்ப்பாவாற் பாடி மகிழ்வித்திருத்தலும் கூடியதே.

இனிப் பதிற்றுப்பத்து ஆசிரியரில் பாலைக்கௌதமனர் என்னும் புலவரொருவர் உளர். அந்நூன் மூன்றாம்பத்து அவர் பாடியதாகும். தலைச்சங்கத்தவராக நச்சினார்க்கினியர் குறித்த கௌதமனரே இப்பதிற்றுப்பத்துக் கௌதமனர் என்று கருதற்குச் சில ஆதாரங்கள் உள்ளன. பதிற்றுப்பத்தில் பாலைக்கௌதமனராற் புகழப்பட்டவன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்னுஞ் சேரனாவன். இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தம்பி எனவும், இவ்விருவரும் உதியஞ்சேரல் என்பானுடைய மக்களெனவும் பதிற்றுப்பத்தின் 2,3-ஆம் பத்துக்களின் பதிகங்களால் விளங்குவனவாம். "உதியஞ்சேரல்" என்னும் பெயர் பாரதப்போரில் பாண்டவ சேனைக்கு உணவளித்த சேரனுக்கு வழங்குகின்றமை முன்னமே அறிவிக்கப்பட்டது. ஆகவே, அவன் மக்களாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் பாரத காலத்தை அடுத்திருந்தவரென்பதுந் தானே பெறப்படும். இவருள் இளையவனாகிய குட்டுவனைப் பாடிய பாலைக் கௌதமனரே தருமபுத்திரனைப் பாடிய கௌதமனரென்பதற்கு இருவர் காலமும் ஒன்றாதல் சான்றாம். பாலைக்கௌதமனர் என்னும் அடைபுணர்க்கப்பட்டதன் காரணம், குட்டுவனை அவர்

பாடிய மூன்றும்பத்து முழுதும் பாலைத்திணைபற்றி வந்தமையேயன்றி வேறில்லை. உதியஞ்சேரல் மக்களிருவரும் செய்த செயல்கள், பிந்திய கடைச்சங்கப்புலவரால், சேரரது ஆதிமுன்னோர் புரிந்த செய்கைகளாகப் புகழப்படுகின்றன. அன்றியும் பாலைக் கௌதமனார் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாடிச் சுவர்க்கம்பெற்றார் என வழங்கும் கதையும், கடைச்சங்கநாளிற் பழஞ் செய்தியாக வழங்கப் பட்டு வந்ததென்பது "நான்மறை யாளன் செய்யுட் கொண்டு, மேனிலை யுலகம் விடுத்தோ னயினும்" எனச் சிலப்பதிகாரத்து வருதலால் விளங்கும். உதியஞ் சேரலது மூத்தமகனாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடிய இரண்டாம் பத்தில், "கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி, பரந்திலங் கருவிய நரந் தங் கனவும், ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்" என வருதலால் அக்காலத்தில், ஆரியரது பிரவேசம் இமயமலைச் சாரலில் அதிகமாயிருந்த தென்பது விளங்கும். இவ்வாறே "அந்தியந்தணர் அருங் கட னிறுக்கும் பொற்கோட் டிமயம்" என்றார் முரஞ்சியூர் முடிநாகரும். கொடைக்குப் பெயர்போன வள்ளலாக, அப்புலவர் காலத்து விளங்கியவன், கௌரவர்க்குத் துணையாயிருந்த யாதவனாகிய அக்குரூரன் என்பான். இவனைத் தலையேழு வள்ளல்களில் ஒருவனென்று சொல்லுவர். தலைச் சங்கநாளில் இவன் பிரசித்திபெற்றிருந்தவனென்பது, "போர்தலை மிகுத்த ஈரைம் பதின்மரொடு, துப்புத் துறை போகிய துணிவுடை யாண்மை, அக்குரனனைய கைவண்மையையே" எனக் குமட்டூர்க் கண்ணனார் பாடுதலால் விளங்கும். பாலைக் கௌதமனார் பாடிய இரண்டாம் பத்தில், உதியஞ் சேரலது இளைய மகனாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவனது செய்கைகளுள் "மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇ" என்பதும் ஒன்றாகப் பதிகத்துட் கூறப்படுகின்றது. பதிற்றுப் பத்துரைகாரர் இவ்வடிக்குச் சிறந்த பொருள் கூறினவராகத் தோற்றவில்லை. இவ்வடியில்வந்த "முதியர்" என்னும்சொல் பாண்டவரைக் குறிப்பதாகும். பல்யானைச் செல்கெழுகுட்டுவன் காலத்தில் பஞ்சவர் வயோதிகம் பெற்று விளங்கினமையால், அப்பெயர் பெற்றனராவர். பாண்டவர்க்கு இப் "முதியர்" என்னும் சொல்வழக்கம் முற்காலத்திலேயே உண்டென்பது, மேலே நாம் மாமூலனார் வாக்காக அகநானூற்றினி

ன்றுங் காட்டிய "மறப்படைக் குதிரை மாறுமைந்திற், றுறக்க மெய்திய தொய்யா நல்லிசை, முதியர்ப் பேணிய வுதியஞ் சேரல்" என்புழியும் பயின்றிருத்தல் காண்க. இம்முதியரென்னும் சொல் பாண்டவரையே குறிப்பதென்பதை, அதற்கு விசேடணமாக "மதியுறழ் மரபின்" என்னும் பதங்கள் புணர்க்கப்பட்டிருத்தலே நன்கு விளக்கும். இவ்விசேடண பதங்களின் பொருள் "சந்திரனோடு பொருந்திவரும் வமிசத்தவராகிய" (முதியர்) என்பதாம். தந்தையாகிய உதியஞ்சேரல் பாண்டவரைப் பேணியதுபோல, அவனிளைய மகனாகிய குட்டுவனும் போற்றினமையால், அவன் செய்கைகளுள் "மதியுறழ்மரபின் முதியரைத்தழீஇ" யதும் ஒன்றாக எடுத்துப் புகழப்பட்டதென்க. இவற்றால், உதியஞ்சேரல் மக்களாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், பல்யானைச் செல்கெழுகுட்டுவனும்; இவ்விருவரையும் முறையேபாடிய குமட்டூர்க்கண்ணனாரும், பாலைக் கௌதமனாரும் பாரதயுத்த நிகழ்ந்தகாலத்தை ஒட்டி வசித்தவர்கள் என்பது வெள்ளிடைமலைபோல் விளங்கும்.

மேற்காட்டிய சேரரிருவரும் உதியஞ்சேரற்கு, வெளியன் என்னும் வேளின்மகளாகிய நல்லினிவயிற்றிற் பிறந்தவர் என்பதும், அவருள் மூத்தவன் இமயத்தில் விற்பொறித்துத் தமிழகம் முழுதும் தன்கோனிறுவியும், இமயச்சாரலில் வசித்த ஆரியரை வென்றும், மிலேச்ச அரசரைப்பிணித்துச் சிறையிட்டும் இவ்வாறு ஐம்பத்தெட்டியாண்டு ஆட்சி புரிந்தவனென்பதும், இளையவனாகிய குட்டுவன் உம்பற்காடு, அக்ப்பா என்ற இடங்களில் வென்றும், பெரியோராகிய பஞ்சவரை வழிபட்டும், பெரியபூமிகளைப் பலர்க்குப் பகுத்தளித்தும், நெடும்பாரதாயனார் என்னும் புரோகிதரைப் பெற்றும் இவ்வாறு பல சிறப்புக்களுடன் இருபத்தைந்து வருஷம் ஆட்சி புரிந்தவனென்பதும் பதிகங்களால் விளங்குகின்றன. குமட்டூர்க் கண்ணனாரும் பாலைக்கௌதமனாரும் பாடிய பத்துக்களால் அதிகமாகச் சரித்திர விசேடங்கள் அறிதற்கில்லையாயினும், அவற்றிற்கண்ட பாடல்கள் தமிழ்மொழியின் தொன்மை மாட்சியையும், சிறப்பையும் நன்றாக விளக்கற்குரியன. இங்கே, அவை ஒவ்வொன்றையும் எடுத்து விரிப்பின், இடம்பற்றாதாகலின் அறிஞர் ஆராய்ந்து மகிழக் கடவர்.

இனிப் பாரதயுத்தகாலம் இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்பு என்பது நமக்குள் வழங்கும் மரபாகும். ஆனால் சுதேச மேதாவிகள் சிலரும், விதேச வறிஞர் பலரும் நாகரிக ஆராய்ச்சி முறையிற் பல்லாற்றானும் சோதித்து வருவதில், முற்காட்டிய காலத்தினின்றும் பெரிதும் வேறுபட்டு அபிப்பிராயமுறுகின்றனர். இவ்வபிப்பிராய பேதங்களில் உள்ள தாரதம்மியங்களையெல்லாம் நன்கு பரிசோதித்து, அவற்றிலொன்றும் பொருந்தியதாகாமை காட்டிச் சித்தூரிலிருக்கும் ஸ்ரீமத் வி. கோபாலையரவர்கள் பிரபலமான பதினொரு தக்க காரணங்களால், கி. மு. 12-ம் நூற்றாண்டினிறுதியே பாரதயுத்த காலமென்று, படிப்போர் மகிழ்ந்துவக்கும்படி, இந்தியன் ரெவ்யூ (Indian Review) என்னும் ஆங்கிலப்பத்திரத்தினும், தாம் தனித்து வெளியிட்ட ஆங்கில நூலினும் (Chronology of Ancient India) நாட்டியிருக்கின்றனர். இவ்வையரவர்களது கொள்கையைச் சரிதவாராய்ச்சி வல்லார் பலர் உண்மையுடையதென்று துணிந்திருக்கின்றார். இவ்வாறு, அக்கொள்கை என்றும் அசைவுபெறாத வலிபெறுமாயின், நமக்கு முப்பத்தொரு நூற்றாண்டுகட்கு முந்திய பாரதயுத்தகாலத்தை யொட்டி, முரஞ்சியூர் முடிநாகராயர், கௌதமனார், வான்மீகையார், மார்க்கண்டேயனார், குமட்டூர்க்கண்ணனார் முதலிய புலவர்கள் தலைச்சங்கத்திருந்து தமிழ்வளர்த்தார்களென்று முடிக்கலாம்.

அகஸ்தியர் தமிழ்நாட்டுக்காடுகளைத் திருத்தி, ஆண்டுக் கண்ணபிரான் வழியினராய வேளிர் பலரைக் குடியேற்றிவைத்தாரென்ற செய்தி நச்சினார்க்கினியரது எழுத்துக்களால் விளங்குகின்றது. இச்சரித்திரம் உண்மையுடையதாயின், அகஸ்தியர் பாரதகாலத்தையொட்டியே தென்னாட்டுக்கு வந்தனரென்று கொள்ளல் நேரும். கபிலரென்னும் புலவர் பெருமான் இருங்கோவேள் என்பானைப் புகழுமிடத்து "நாற்பத்தொன்பது வழிமுறைவந்த வேளிருள் வேளே" எனக் கூறுதலால், ஏறக்குறைய நமக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வேளிரின் ஆதிமுதல்வர் அகஸ்தியரால் தென்னாட்டுக்கழைக்கப்பட்டனர் என்று தெளியலாம். இதனை விரிவாக "வேளிர் வரலாறு" என்பதிற் காட்டியுள்ளோம். இவற்றால், தலைச்சங்கமிருந்த

அகஸ்தியனாரும், அம்மகாபாரதகாலத்து விளங்கினவரென்று பெறப்படுகின்றது.

இதுகாறும் கூறிவந்த விஷயங்களால், மகாபாரதகாலத்தில், தமிழ்மொழி பாரதகண்டத்தில் வியாபகம் பெற்றுச் சிறந்தபுலவர் பலரால் வளர்க்கப்பட்டதென்பது ஒருவாறு விளங்கும்.

மு. இராகவையங்கார்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

தென்றேயத்தின்கண், முனைப்பாடி, மிலாடு, சேதிநாடு என்று பெயர்பெறும் நடுநாடு வெகுகாலமாக மிலாடர்கள் என்னுமரசர்களால் ஆண்டுவரப்பட்டது. மிலாடு என்னும் பதம் மலாடு என்பதன் திரிபு; மலாடு 'மலைநாடு' என்பதன் மரூஉ என்று இலக்கணங்கள் கூறுகின்றன. மிலாடர்க்குச் சேதியர், முனையரையர் என்னும் மறு பெயர்களுமுள. இவர்கள் இராஜதானி திருக்கோவலூர்[1]. இவ்வரசர்கள் சுக்கிராந்வயமுடையவர்களென்றும்[2] உதயாசலாதித்தர், சக்திநாதர் என்னும் அபர நாமதேயங்களை யுடையவர்களென்றும், இவர்கள் குலம் மலையகுலமென்றும், கொடியும் இலாஞ்சனையும்

---

(1) "சேதிநன்னாட்டுநீடு திருக்கோவலூரின்மன்னி
மாதொருபாகரன்பின் வழிவருமலாடர்கோமான்."
மெய்ப்பொருணாயனார் பு. பா. 1.

(2) * * * "கன்னரதேவர்க்கு யாண்டு 17வது முனைப்பாடித்திருநாவலூர்த் திருத்தொண்டீச்வரத்து மஹாதேவற்கு ஸ்வஸ்தி ஸ்ரீ ... சுக்ராந்வய ... ஸக்தி நாயகஸ்ரீ ஹம்ஸ ஸ்ரீ ... மலையகுலோத்பவ ... ஜோதிர் ஸ்ரீசேத் நரசிம்ம வர்ம்ம மிலாடுடையநாட்டான் சித்தவடவன் ஆகிய நரசிம்ம வன்மன் வைத்த விளக்கு * * "

எபிகிராபியா இண்டிகா.

முறையே சிங்கமும், சிகிமகரமும் என்றும் திருநாவலூரிலுள்ள ஒரு சாஸனத்தால் விளங்குகின்றன. இவர்களுள் இராமன், நரசிங்கன் என்னும் பெயர்கள் அடுத்தடுத்து வருவது மிகுதியும் வழக்கம்போலக் காணப்படுகிறது [3]. நாயன்மார் அறுபத்துமூவர்களுள் இருவர் சேதிநாட்டரசர். இவர்களில் முதல்வர் மெய்ப்பொருணாயனர். இவர்தாம், தம்மை யோக்கியமாக வெல்லச்சக்தியற்ற முத்தநாதன் என்னும் மாற்றரசனல் நயவஞ்சகத்தாற் கொலையுண்டு வியோகமடையும்போது, முத்தநாதனைக்கொல்லப்புக்க தம்மனிதர்களைத் தடுக்கும்படி தத்தன் என்னும் தம் ஏவலாளனை நோக்கி "தத்தா நமரேகாண்" என்று கூவினவர். மற்றவர் நரசிங்கமுனையரையர். இவர்காலத்துத்தான் சுந்தரமூர்த்திகளிருந்து தேவாரம்பாடியது. ஆதலால் சுந்தரமூர்த்திகள் காலம் வரையறுக்கப்படின் இவர்காலமும் பெறப்படும்.

சுந்தரமூர்த்தி நாயனர் தம் சரித்திரத்தை ஆங்காங்குப்பொதிந்து தேவாரம்பாடியிருக்கிறார். அவைகளைக்கொண்டும் கர்ணபரம்பரையாக வந்த கதைகளைக்கொண்டும் சேக்கிழார் நாயனர் சரித்திரத்தை யெழுதினர் போலும்! நம்நாயனர்தாம் இசைஞானியார்க்கும் சடையனர் என்னும் ஆதிசைவப்பிராமணர்க்கும் அவதரித்தவர் என்பதை,

"நண்புடைய நன்சடைய னிசைஞானி சிறுவ னவலூர் கோனரூரன்" "இசைஞானி சிறுவன்" என்று ஆங்காங்குக் கூறியுள்ளார்.

---

(3) திருநாவலூரிலேயே மேற்கூறிய சாஸனமும், சகவருஷம் 875-ல் வரையப்பட்ட சாஸனம் ஒன்றும் முறையே ஒரு நரசிம்மவர்மனையும் குலமாணிக்கன்இராமதேவன் என்பவனையும் குறிக்கின்றன. திருக்கோவலூரில் திருவிக்கிரமப்பெருமாள் கோயில் கற்பக்கிரகத்தை செங்கற்கட்டிடமாயிருத்தலைக்கண்டு கருங்கல் கட்டிடமாக்கினன், ராஜராஜ தேவன் காலத்திருந்த மிலாட்டரையன் நரசிங்கவன்மன் என்று அவ்விடத்துச் சாஸனமொன்று கூறுகிறது.

எபிகிராபிஸ்ட் ரிபோர்ட்டு 1900 ல் நிர். 120.

இவரிளம்பிராயத்து இவரைக்கண்ட நரசிங்கமுனையரையர், இவரிடம் பேரன்புகொண்டு இவரைத் தம் அபிமான புத்திரராக்கிக் கொண்டார். உரியகாலங்களில் அக்ஷராப்பியாசம் உபநயனாதிகள் செய்விக்கப்பெற்றுக் கல்லியாணத்துக்குரிய பருவமடைந்தார். அப்பொழுது தந்தையார் தம் குலம் கோத்திரத்துக்குத்தக்கவரான புத்தூர் சடங்கவிசிவாசாரியர் திருமகளைத் தம்மகனுக்குப் பத்தினியாக்க நிச்சயித்து முகூர்த்தமுமிட்டு அரசனுக்கறிவிக்க, நரசிங்கமுனையரையரும் இராஜகுமாரர்களுக்குரிய ஆடம்பரங்களோடு வதுவை நடத்தச் சித்தம்பண்ணினர். முகூர்த்தமும் கிட்டியது. பாணிக்கிரகண காலத்தில், ஒரு விருத்தப்பிராமணர் கலியாணமண்டபத்திற்புக்கு, சபையிலிருக்கும் அந்தணர்களை நோக்கி ஆரூரரைச்சுட்டி "இம்பணமகன் என்னடிமை, என்னிடம் ஊழியஞ்செய்தலொழிந்து யானறியாமல் இவ்விடத்துக் கலியாணம்புரியத்துணிந்தான்[4]. இவன் என்னிடத்திற் பரம்பரையாய் அடிமைத்தொழில்செய்தமைக்கு, இதோ! ஆவணச்சீட்டுமிருக்கிறது" என்று ஒரு சீட்டையும் நீட்டி முகூர்த்தத்தைக் கழியச்செய்தார். அப்பொழுது சுந்தரமூர்த்திகள் தம்மை அடிமையென்று மொழியும் கிழவரிடம் வெகுண்டு, தாம் அவ்வாவணத்தைப்பார்க்கவேண்டும் என்று மெள்ள அவரிடமிருந்து அதைவாங்கிக் கிழித்துவிட்டார். இதைக்கண்டகிழவர், "இப்படி இவன் செய்வானென்பதையுணர்ந்தே நான் மூலவாவணங்கொணராது அதன் பிரதியைக்கொணர்ந்தேன். இப்பொழுது வேண்டுமாயின் நீவிர் என்னுடன் வருவீராயனல் அதைக்காட்டுவேன்" என்று சொல்லி அந்தணர்களும் ஆரூரரும் பின்றொடரச்சென்று திருவெண்ணெய்நல்லூர் அருட்டுறையில் மறைந்து, சுந்தரமூர்த்திகட்கு பா

---

(4) "* * * வெண்ணெய்நல்லூரி
லற்புதப்பழவாவணங்காட்டி
யடியனவென்னையாளதுகொண்ட
நற்பதத்தைநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே" என்றும்,
"தன்மையினாலடியேனைத் தாமாட்கொண்டநாட்சபைமுன்
வன்மைகள்பேசிவன்றொண்டனென்பதோர்வாழ்வுதந்தார்".
என்றும் நாயனார்தேவாரத்துக்காண்க.

த்திரம் இருடபா ரூடராய்த் தரிசனமளித்தார். அப்பொழுது பரம சிவத்தினிடம் வன்சொற்களைப்பேசிய காரணத்தால் ஆரூரர்க்கு "வன்ரொண்ட"னென்ற பெயர்வந்தது [5]. இவ்வற்புதநடந்த நாள் முதல் பற்பல சிவக்ஷேத்திரங்களை தரிசிக்க இச்சைகொண்டு செல்லுபவர், திருவதிகைவீரட்டத்தைக்கண்டு, அப்பமூர்த்திகள் தொண்டு செய்தவிடமாதலால் அதை மிதிக்கலாகாது என்று அவ்விடத்தருகிலிருந்த "சித்தவடமடத்தில்" எழுந்தருளி இருந்தார். அங்கு அன்றிரவு சிவபிரான் ஓர் கிழவன் உருக்கொண்டு சுந்தரமூர்த்திகளின் முடிமேல் தம் திருவடிகளைச் சாத்தியருளினர்.

பின் சீகாழியடைந்து சம்பந்தர்அவதாரஸ்தலத்தையும் மிதிக்கக்கூடாதென்று வணங்கிச்சென்றார். இவ்வாறு நடந்து வருநாளில்,

கைலேயில் 'கமலினி'யாயிருந்த சேடியானவள் "உருத்திரகணிகைமாராம் பதியிலார்குலத்திற் றோன்றிப் பரவையாரென்னுநாமம்" உடையவளாய்த் திருவாரூர்க்கண்ணே பிறந்து வளர்ந்துவந்தாள். அவ்விடத்து நம் நாயனர் சென்றபோது இவரைக்கண்டு காமுற்றுச் சிவபிரானருளால் மணந்தார். குண்டையூர் கிழவர் பரவைநாச்சியாருக்குத் தினந்தோறும் சம்பாநெல் முதலிய பதார்த்தங்களனுப்புவது வழக்கம். அப்பொழுது தேசமெங்கும் க்ஷாமமுண்டாகக், குண்டையூர்கிழவர் வறியராய்ப் பரவையார்க்கு நெல் முதலியன கொடுக்க ஆற்றாதவரானர். இதைக்குறித்து மனம்வருந்தி ஒருநாள் இரவு துயில்கொண்டு எழுந்திருக்க, மறுநாள் குண்டையூரெங்கும் நெற்குவியலாய்க்கிடக்கக்கண்டானந்தமுற்றுச் சுந்தரமூர்த்திகட்கறிவித்தார். அப்பொழுதுதான் நாயனரும் "குண்டையூர்ச்சிலநெல்லு

---

(5) இதையே குறித்து

"அடக்கங்கொண்டாவணங்காட்டிநல்வெண்ணெயூராளுங்கொண்டார்".

என்றும்,

"அன்றுவெண்ணெய்நல்லூரினுயினேன்றன்னையாட்கொண்டசம்புவே".

என்றும்,

"வலியவந்தென்னையாண்டுகொண்டானே".

என்றும் சுந்தரமூர்த்திகள் பாடியிருக்கிறார்.

பெற்றேன்" என்று திருக்கோளிலிப்பதிகத்திற் பாடியருளி நெல்லை ப்பூதகணங்களால் திருவாரூரிற் சேர்ப்பித்துக்கொண்டார்.

நாயனர் திவ்விய தேசயாத்திரைசெய்து வருவதையறிந்து கோட்புலிநாயனர் இவரைத் தம்மூராகிய திருநாட்டியத்தான்குடிக்கு எழுந்தருளும்படியாக அழைத்து, இவர்க்குத் தம் திருப்புதல்வியராகிய சிங்கடி, வனப்பகை என்பவர்களைக்கலியாணஞ்செய்துகொள்ள வேண்டுமென்றளித்தார். ஆயினும் நாயனர் அவர்களை மனைவியராக்கப்பிரியமில்லாது தம் மக்களாக ஸ்வீகரித்தார். இதனையே, அடிக்கடி தம் தேவாரத்தில் "சிங்கடியப்பன்" "வனப்பகையப்பன்" என்று தம்மை ஆங்காங்குக் குறித்துக்கொள்ளுகிருர்.

பின்பு திருப்புகலூர் சென்று பெருமானைத்தரிசித்துத் திரும்புகையில் அகாலநித்திரைவர, அவ்விடத்திருந்த சில செங்கற்களை தலைக்கடியில் வைத்துத் தூங்கியெழுந்துபார்க்க அவை எல்லாம் பொன்னுகிவிட்டன. மறுபடியும் திருப்பாச்சிலாச்சிராமத்தில் "வைத்தனன்றனக்கே" என்னும் பதிகத்தைப்பாடிப் பொற்குவையடைந்தார்.

திருப்பேரூரிற் சென்றபோது சிதம்பரத்தில் நடனமாடும் சேவையைக்காண நாயனர் அபேக்ஷிக்க சிவபிரான், அக்காட்சியை அவ்விடத்தில் பிரசாதித்தார். திருமுதுகுன்றத்துப் பெருமானடிகளிடம் பன்னீராயிரம் பொன்பெற்று அதை மணிமுக்தா நதியிலிட்டு, கடவுளருளால் திருவாரூர்க்குளத்திற் பெற்ருர். இவ்வாறு தேசாடனம் பண்ணிவருகையில் ஒருநாள் திருக்குருகாவூரினிடம்வந்ததும் நாயனர் பசியாற்களைத்துவிட்டார். அப்போது அவ்வூரிலினிதமர்ந்துள்ள சிவபெருமான் தண்ணீரும் கட்டுசோறும் கொண்டுபோயுதவி நாயனரையும் இவர் பரிஜனங்களையும் ஆதரித்தார். இதேமாதிரி திருக்கச்சூரிலும் நேர்ந்தது. இவ்விடத்தில் தம் பரிசனங்கள் உச்சியம்போதாயும் வந்துசேராதிருக்க, நாயனர் பசியால் வருந்துவதையறிந்து அவ்வூர் ஆலக்கோயிலிலிருக்கும் கடவுள் ஒருமறையோன் உருக்கொண்டு ஊரிற் பிச்சையெடுத்து நாயனர் பசியைத்தணிவித்தார்.

நாயனர் பற்பல சிவஸ்தலங்களைத் தரிசித்தும் அற்புதங்களைச் செய்தும் செய்வித்தும் வருநாளில் ஒருநாள் திருவொற்றியூர் மாநகரஞ்சார்ந்தார். அப்பதியில் ஞாயிறுகிழவன் என்பவருடைய மகளார் சங்கிலியென்பவர் தாம் ஒருவரையும் மணப்பதில்லையென்று நிச்சயித்துக் கன்னிமாடம்புக்குப் பரமசிவன் கைங்கரியங்களைச் செய்து வாராநின்றார். இச்சங்கிலியாரிடம் சுந்தரமூர்த்திகளுக்கு மனம்பற்ற, சங்கிலியாரும் தம்மைவிட்டுப்பிரிவதில்லை என்று நம்பி வாக்குத்தத்தம் செய்யின், தாம் இவருடன் கூடுவேன் என்று உடன்பட்டார் 6. அது முதல் கொஞ்சகாலம் சங்கிலியாரோடு வாழ்ந்திருக்கும்போது, திருவாரூர் எம்பெருமானைத் தரிசிக்கவெண்ணமுண்டாயிற்று. அப்பொழுது சங்கிலியாரையும் நினைக்காமல் திருவாரூருக்குச்செல்லப்புறப்பட்டதும் ஒற்றியூருடைய பரமசிவன் இவர் கண்கள் போகும்படிசெய்தார் 7. பின்பு நாயனர் திருவேகம்பத்திலும், திருவாரூரிலும் பதிகம்பாடிக் கண்களைத்திரும்பப்பெற்று, பரவையாரிடம்செல்ல அவர் ஒற்றியூர்க்கண் நடந்தவரலாற்றை அறிந்து ஊடியிருந்தார்; இவ்வூடல் தணிவிக்கச் சிவபெருமான் இரண்டுதடவை தூதுசென்று பரவையாரையும் வன்றொண்டரையும் கூட்டிவைத்தார். இவ்வாறு பரமசிவத்தைத் தூதனுப்பினர் என்று கேட்ட ஏயர்கோன்கலிக்காமநாயனர் சுந்தரமூர்த்திகளிடம் வெகுவெறுப்புற்றுத் தம் பிராணனையும் இழந்தார் என்பது ஏயர்கோன்கலிக்காமர்புராணத்திற் கண்டுகொள்வது. இக்காலத்துத்தான் சுந்தரர் திருத்தொண்டத்தொகையைப்பாடியது.

---

(6) "* * * சென்று திருவொற்றியூர்புக்குச்
சார்ந்தனன்சார்ந்தனன்சங்கிலிமென்றோள் தடமுலை"
"பண்மயத்தமொழிப்பரவைசங்கிலிக்குமெனக்கும்பற்றாயபெருமானே"
"சங்கிலியோடெனைப்புணர்த்ததத்துவனை".
"மான்றிகழும்சங்கிலியைத்தந்துவருபயன்களெல்லாம்
தோன்றவருள்செய்தளித்தாய்".
என்பன சுந்தரமூர்த்திகள் வாக்கு.

(7) "போகுருடாவெனத்தரியேன்
முகத்தினிற்கண்ணிழந்தெங்ஙனம்வாழ்கேன்முக்கண்ணுமுறையோ".
"சங்கிலிக்காவென்கண்கொண்டபண்ப" தேவாரம்.

சேரமான் பெருமாள் நாயனார் வன்றொண்டர் பெருமைகேட்டு, இவரை நாடிச்சேர்ந்து இவருக்குப்பணிகள் செய்து தாமும் இவருடன் திவ்விய தேசயாத்திரை செய்து வருங்கால், இருவருமாய்ப் பாண்டிநாட்டு இராஜதானியாகிய மதுரைமாநகரஞ்சார்ந்தார். அப்பொழுது அவ்விடத்துத் தன் மாமனாராகிய பாண்டியன் மனைக்கு வந்திருந்த சோழராஜனும் [8], பாண்டியனும் நாயனாரையும் சேரமானையும் எதிர்கொண்டு அழைத்துவந்து உபசரித்தார்கள்.

அக்காலத்து மதுரையி லாண்டுகொண்டிருந்த அரசன் வரகுண பாண்டியன் என்று,

"மன்றலங்தெரியன்மார்பன்வரகுணன்செங்கோலோச்சிப்
பொன்றலங்காவலானிற்பொலியுநாளேமநாத
னென்றொருவிறல்யாழ்ப்பாணன்வடபுலத்திருந்தும்போந்து
வென்றிகொள்விருதினேடும்விஞ்சைசூழ்மதுரைசார்ந்தான்.

என்னும் திருவிளையாடற் புராணச்செய்யுளால் தெரியவருகிறது. (விறகுவிற்றபடலம்) இப்பாட்டிற் கூறியிருக்கும் பாணபத்திரரே சோமசுந்தரக்கடவுளிடம் திருமுகம்பெற்றுச் சேரமான் பெருமாள் நாயனாரை நாடிப் பரிசுபெற்றவர்.

சேரமான் பெருமாளோடும் பல பதிகளைத் தரிசித்து அவருடன் மேல்நாட்டுக்குச்சென்று அவ்வரசனால் வெகுமதிக்கப்பட்டுத் திரும்பித் திருவாரூர் சென்றடைந்தார். கொஞ்ச காலத்துக்குப்பின் சுந்தரமூர்த்திகள் கைலாசநாதன்திருவடியடைய இச்சித்து வெள்ளானையின்மேல் ஏறி, சேரமான் பெருமாளோடும் இவ்வுலகு நீத்தார்.

இவ்வாறு செய்து போந்த இம்மகான்காலம் இன்னதென்று நிர்ணயிக்கச் சற்றுமுயல்வோம். சுந்தரமூர்த்திகள் தம் காலத்தின் அரசுவளமையைக் குறித்து,

---

(8) தென்னவர்கோன்மகளாரைத்திருவேட்டுமுன்னரே
தொன்மதுரைநகரின்கணினிதிருந்தசோழனார்
அன்னவர்களுடன்கூடவணையவவருங்கூடி
மன்னுதிருவாலவாய்மணிக்கோயில்வந்தணைந்தார்.

பெரியபுராணம், கழறிற்றறிவார் புராணம் பா. 92.

"கருமையாந்தருமனர்தமர்நம்மைக்கட்டியகட்டறுப்பிப்பானை
யருமையாந்தன்னுலகந்தருவானைமண்ணுலகங்காவல்பூண்ட
வுரிமையாற்பல்லவர்க்குத்திறைகோடாமன்னவரைமறுக்கஞ்செய்யும்
பெருமையாற்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே.

என்று தம் தேவாரத்துக் கூறியிருப்பதைக்கொண்டு, அக்காலத்துப் பல்லவ ராஜர்களுடைய அரசாட்சி தளர்வடைய ஆரம்பித்துவிட்டதென்று அறியலாம். பல்லவசார்வபௌமத்துவம் குன்றவே சோழர்களும் பாண்டியர்களும் தலையெடுக்கத் துணிந்தார்கள் என்பது உதயேந்திரம் சாஸநத்தால் தெரியவருகிறது. அச்சாஸனப்படி திரமிள அரசர்கள் தம்முள்ளொத்துப் பல்லவ அரசன் மீது படையெடுத்துச்சென்றதாகவும், அப்பொழுது உதயசந்திரன் என்னும் படைத்தலைவன் அவர்களோடு நிம்பவனம், சூதவனம், அழுந்தூர், மண்ணை முதலானவிடங்களிற் பொருதான் என்றும் கூறியிருக்கிறது. பின்னும் இரண்டாம் பிருதிவிபதியின் சாஸனத்தில் (உதயேந்திரம் சாஸனம்) தன் பாட்டனாகிய முதற்பிருதிவிபதி வரகுணனோடு வேம்பில் அல்லது வைம்பல்குழி(இஃது அதன் திரிபாயிருக்கலாம்)என்னுமிடத்துப்பொருததாகச் சொல்லிக்கொள்ளுகிறான். இவ்வரகுணன் சாஸனம் ஒன்று திருச்சிராப்பள்ளிச் சுற்கோயிலில் மாறஞ் சடையனென்னும் பாண்டியவரசன் காலத்தில் வரையப்பட்டிருக்கிறது [9]. இவ்வரகுணனும் மாறஞ்சடையனும் சமகாலத்தவர்களென்பது இதனால் ஏற்படுகிறதுமன்றி, வரகுணன் மாறஞ்சடையனுக் கிளையவனும் அவனுக்கேதோ உறவுமுடையவனுமாவனென்பதும் தோன்றுகிறது. இம்மாறஞ்சடையன் வென்ற போர்களைக் குறித்துப் பாக்களாகப் பலரும் பாடி இருதூண்களிற் பதிந்துள்ளார். இப்பொழுது இத்தூண்கள் பரிதிநியமத்தி னருகிலிருக்கும் செந்தலை யென்னும் கிராமத்துப் பிடாரிகோயிலிலிருக்கிறது. அதில் இவ்வரசன் அழுந்தூரிலும் மணலூரிலும் போர் புரிந்தானென்று சொல்லியிருக்கிறது [10]. ஆகவே உதயேந்திரம் சாஸனத்திற் கூறிய சண்டைகளிற் சில

---

(9) கிரிஸ்டியன்காலேஜ் மாகசீன். மேமீ 1905வு.

(10) " * * உலந்தார்—தோழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த ஆராழுந்தி யூரோன்னு மூர்" என்றும்,

" * * * விழிகட்பேய்ப்—புண்ணனைந்துகையூம்பப்போர்மணலூர் வென்றதே, மண்ணணைந்தசீர்மாறன்வாள்". என்றும் எழுதியுள்ளன.

*

வரகுணன், மாறஞ்சடையர்களாலும் செய்யப்பட்டனவெனவே, இரண்டு சாஸனத்திலுங் கூறிய சண்டைகள் ஒன்றுதான் என்று துணியலாம். அப்படித்துணியக் காரணமுமுண்டு. பெரியபுராணத்துட் கூறியவாறு சோழன் பாண்டியன்பெண்ணை மணந்து, இருவரும் ஒன்றுகூடிப் பல்லவசார்வபௌமத்தைத் தாக்கி சுவாதீனமடைய எத்தனித்ததாகத்தோற்றுகிறது. இவ்வாறு பாண்டியன் பெண்ணைச் சோழனொருவன் அக்காலத்துக் கலியாணம்செய்துகொண்டானென்பது கீழே கொடுத்திருக்கும் திருச்செந்துறைச் சாஸனத்தின் முற்பகுதியால் தெரியவரும் [11]. வரகுணன் காலம் மேற்கூறிய சாஸனங்களால் உத்தேசம் கி. பி. 850 என்றுகொள்ளலாம்; அப்பொழுது அரசாண்ட சோழவரசன் விஜயாலயனுயிருத்தல் வேண்டும். ஏனெனில் இரண்டாம் பிருதிவிபதியின் சார்வபௌம சக்கரவர்த்தியாகிய முதற்பராந்தகன் 9-வது நூற்றூண்டின் முதலில் அரசாளத் தொடங்கினனென்றால் இவன் பாட்டனுகிய விஜயாலயன் உத்தேசம் கி. பி. 850-ல் இருந்திருக்கக்கூடும். இவ்விஜயாலயன் ஒரு பரகேசரிவர்மன் என்பது "பெரியன் லேய்டன்" சாஸனத்தால் விளங்கும். திருச்செந்துறையிலுள்ள சாஸநத்துப் பரகேசரியை விஜயாலயன் என்று கொண்டால், [12] "சோழபெருமானடிகள் மகனர்—" ஆதித்தனும், "தென்னவனிளங்கோவேள்"— வரகுணனுமாவார்கள். (மாறன்சடையன் பெரியவனுயிருக்க வரகுணன் இளங்கோவேளென்றே சொல்லத்தக்கான்). பல்லவராஜன் மேற் படையெடுத்துச்சென்ற திரமிள அரசர்கள் விஜயாலயன், மாறஞ்சடையன் இவர்கள் சிறுவர்களாகிய வரகுணனும், (ஒருகால்) ஆதித்தனுமாயிருக்கலாம். இக்காலமுதற்றான் சோழர்கள் சார்வபௌமத்துவத்தை யடைந்தார்கள். பல்லவர்களைத் தம்மடிப்படுத்தாவிடினும் தாம் அன்றுமுதல்

---

(11) ஸ்வஸிஸ்ரீ கோ (ஒ) பரகேசரிபன்மக்குயாண்டு ௩ ஆவது இவ்வாண்டு வ‍தசோழபெருமானடிகள் மகனர் அரிகுலகேசரியார் தேவியார் தென்னவனிளங்கோவேளார் மகளார் பூதி ஆதிச்ச பிடாரியார் பிரமதேயம் ஈசான மங்கலத்து திருச்செந்துறை தாம் எடுப்பிச்ச கற்றளி பெருமானடிகளுக்கு * *,

(12) இவன்பெயர்க்கு ஏற்ப இச்சாஸனத்துக்கூறிய தென்னவனிளங்கோவேளின் பெண்பெயரிலும் 'ஆதிச்சன்' என்னும் பெயர்வருதலும் காண்க.

அவர்கள் கீழிருக்கவில்லை. பாண்டியரும் சோழரும் அக்காலத்து அந்நியோன்னியமா யிருந்தார்கள் என்பதற்குச் சான்று பாண்டியர்களில் மாறன்சடையன் சாஸனம் சோழநாட்டின் கண்ணுள்ள செந்தலை, திருச்சிராப்பள்ளி, திருகோகர்ணம், நார்த்தாமலை, குடுமியான்மலை முதலியவிடங்களிற் காணப்படுகின்றன. பாண்டியர்களையும் சீக்கிரமே சோழர்கள் அடிப்படுத்தினர் என்பது சொல்லவேண்டுவதில்லை.

மேற்கூறியவைகளைக்கொண்டு சுந்தரமூர்த்திகள் பல்லவசக்கரவர்த்திகள் தளர்ப்பல்லிய மடைந்தகாலமும் சோழபாண்டியர்கள் தம்முள் ஒத்திருந்து பல்லவ சார்வபௌமத்தினின்றும் விடுவித்துக்கொண்டகாலமும், வரகுணன் ஆண்டகாலமும் ஒன்றே என்றுபெறுதலின், இவையெல்லாம் நடந்தது உத்தேசம் கி. பி. 850 என்றும் ஒருவாறு ஸ்தாபிக்கலாம். இது நிற்க,

திருவிடைமருதூர்ச் சாஸனம் ஒன்றில் வன்றொண்டன் என்கிற பெயர் சமானியமனிதன் ஒருவன்முதல் ராஜராஜன் காலத்துத்தரித்திருந்தான் என்று தெரியவருகிறது. இதுவன்றிக்கே இவ்வரசனே இந்நாயனார் விக்கிரகத்துக்குப் பலநன்கொடைகள் அளித்திருக்கிறான். இவைகளால் இந்நாயனார் பெயர் இவன்காலத்துக்கு முந்தியே, பூஜிக்கப்படும் நிலைக்கு வந்துவிட்டது என்று ஏற்படுகிறது. இவ்வாறு ஆதற்குச் சாதாரணமாக மூன்று நான்கு தலைமுறையாகவேண்டும். அப்படியே மூன்று நான்கு தலைமுறைதான் ஆயிருக்கிறது என்பது மேற்கூறியவைகளால் நன்குவிளங்கும்.

இந்நாயனார் காலத்திருந்தவர் நரசிங்கமுனையரையர். திருநாவலூர்ச் சாஸனத்திற் கூறிய நரசிம்மவர்மன் கன்னரதேவன் 17-வது ஆண்டிலிருந்தவன்; அதாவது கி. பி. 957. கி. பி. 954-க்கு சரியான 875 சகவருஷத்திருந்த முனையதியரையன் குலமாணிக்கன்இராமதேவன் முற்கூறிய சாஸனத்தியநரசிங்கவர்மனுக்கு முன்னோனாதல்வேணடும். நரசிங்கமுனையரையநாயனார் குலமாணிக்கன்இராமனுக்கு மூன்றுதலைமுறை முன்னவராயிருக்கவேண்டும் (சுந்தரர் காலம் 850-கி. பி. என்று கொள்ளின், 954 கி. பி-க்கும் 850 கி. பி-க்கு நடுப்பட்ட 100 வருஷம் மூன்றுதலைமுறையாதல் பற்றி இத்துணி

வுகொள்ளப்பட்டது). இம் முனையரையர்கள் மேற்சொன்னபடி இராமன் நரசிம்மன் என்னும் பெயர்,முறையே தரித்துவந்ததாக ஊகிக்கின், குலமாணிக்கன் இராமனுக்கு மூன்றாந்தலைமுறையின் முன்னோனும் நரசிங்கனென்னும் பெயரையே யுடையவனுமாவன், ஒருக்கால் இவன்தான் நரசிங்கமுனையரையநாயனாராயிருப்பானோ வென்றுஞ் சங்கிக்கலாம்.

சுந்தரமூர்த்திகள் காலத்திருந்த நாயன்மார்கள் சோமாசியார்' விறன்மிண்டர். மானக்கஞ்சாறர், ஏயர்கோன்கலிக்காமர், பெருமிழலைக்குறும்பர், கோட்புலி (இவர் இருபுதல்வியர் சிங்கடி, வனப்பகை) சடையனார், இசைஞானியார். எனவே இவர்கள்காலமும் சற்றேறக் குறைய 9-வது நூற்றாண்டின் நடுவாயிருத்தல்வேண்டும்.

து. அ. கோபிநாதராவு,
திருவல்லிக்கேணி.

உ

சிவமயம்.

திருக்குறள்-வீட்டின்பால்.

Theosophy of the Kural.

(உஎக-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேல் அவன் முற்றறிவனாகவும், நாம் சிற்றறிவுடையேமாகவும் அவனை நாமறிந் தடைவதெப்படியெனின், இறைவனின் மற்றொரு தன்மையினால் அஃது எளிதாம். அன்பே இறைவன். அன்பு வேறு இறைவன் வேறன்று. ஆகவும் அவன் நினைப்பவர் மனமே கோயிலாகக்கொண்டு வசிப்பவன். 'ஏகினான்' என்ற பதத்தினால், இறைபணி நின்ற அன்பர்களுக்கு அவர்கள் நினைப்பதன்முன்னமே அவன் விரைந்துசென்று அருளுமாறுங் கண்டாம்.

அவன் முற்றறிவுடையனாதலின், நாமவனை அளந்தறிவது இயலாதாகும். மேலும் நம்தற்போதத்தை முன்னிட்டு அறியப்புகின்,

இன்னும் அசாத்தியமாகும். நான் எனது என்னும் அகப்பற்று புறப் பற்றுக்களை நீக்கி இறைவன்பால் உள்ளன்போடுமுருகி மெய்சிலிர்த்து நிற்பார், அவன் அருளைப்பெறுவது எளிதினும் எளிது; உமாபதி சிவமும் அவ்வித அன்பும் இன்றுண்டேல், இன்றே அவனருளைப் பெறலாகுமென்றார். நன்முயற்சி எவ்விதத்தினும் வேண்டுமாயினும், அவன் அருள் முன்னர்வேண்டுமென்பது 'ஏகினன்' என்னும் பதத்தினால் மீண்டும் விளங்கும்.

"அவனருளாலே அவன்றாள் வணங்கி"

"தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்"

"அன்பர்க்கு மெய்யன் அல்லாதார்க்கு அல்லாதான்"

"நினைப்பரிய தனிப்பெரியோன்"

"தேவர்களே, நூலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்திருக்கும் பாவகத்தால்"

"தேவர்கட்கும், தெரிக்கும்படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை,
யுருக்கும் பணிகொள்ளும்"

"பாரார் விசும்புளார்...ஆராலும் காண்டற்கரியன் எமக்கெளியன்

என்பன மறைமொழிகள்.

மேல் எங்கே அன்பு விழையுமோ, அங்கே ஆநந்தம் பிறக்கும். அன்பில்லாதவிடமும் ஆனந்தமுண்டாகுமோ. இறைவனை ஆனந்தனாகவும் ஆனந்தசொரூபனாகவும் சொல்லி, அவன் நம்மிடத்தில் அன்பு அல்லது அருளைச்செலுத்த இயலாதவன் என்றால் ஒருக்காலும் பொருந்துமோ. இறைவன் நம்மிடத்தில் அருளைப்புரிந்து, யாம் அன்புருகிநிற்றலும் அவன் நமக்கு ஆனந்தமாதலும் பின்வரும் திருவாக்குகளாலும் நன்குவிளங்கும்.

"சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரனை"

"உள்ளப்படாத திருவுருவை யுள்ளுதலும்
கள்ளப்படாத களிவந்த வான்கருணை"

"தினைத்தனை யளவுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

‘ உருகிப்பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடலை’

“ஞானக் கரும்பின் றெளியைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்டான்.”

இருவர் அறிவினால் ஒன்றப்படுவது கூடாதாகும். அன்பே ஒருவரைஒருவர் ஒன்றுபடுத்தல் வல்ல, ஆயின் ஒருவர் ஒருவரை அறிந்தால்தான் அன்பும் பிறக்கும். பூர்வபுண்ணியபத்தினாற் பார்த்தலுமே அன்புவிழைவதும் உண்டு. “கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை” என்றதும் அதுபற்றி. அன்பின் முன் கீழ்மேலில்லை. வலியார் எளியார் இல்லை. சாதி குலமில்லை. நான் எனதென்பதுமில்லை. தற்சுகம் பாராது பிறர் துன்பம் தானே வகிக்கும். பிறர் நன்மையே நாடும். பிறர்மேல் தீங்கு நினையாது; எல்லாமிருந்தும் உள்ளன்பில்லாவிடில் வற்றன்மரமாமன்றோ.

ஓர் ஐரோப்பியதத்துவ ஞானி, “சூரியனைப்போலும் இறைவன்; அவனையறிவது கூடாது; அவன் நுண்ணிய ஒளிக்கிரணங்களே அவனது அருள், அவ்வருளொளியாலேமட்டும் நாமவனை யறியலாம்” என்றார்.

மேல் அவன் அகண்ட ஞானமுடையவனாகவும், சால அன்புடையவனாகவுமிருக்க, உயிர்கள் பிறந்திறந்துழன்று துன்பத்தில் ஆழ்ந்து அவதிப்படுவதேன்? இவ்விதந்தோற்றுவித்தல் முதலியவைகளை யேன்செய்யவேண்டுமெனில், இறைவனது செய்கை பயனற்றதுமன்று: தன்பொருட்டுமன்று; பிறர்பொருட்டே: அவன் தனக்கென்று வேண்டுதல் வேண்டாமையிலனாகையின். உயிர்கள் இடும்பையுட்பட்டு நிற்பவர்கள் ஆகையால், அவ்விடும்பை யொழிக்கும்பொருட்டே இப்படைத்தல் முதலிய தொழில்களைச் செய்வதும் ஆகும். இறைவன் என்றும் சலமிலனாதற்கும் உயிர்கள் சஞ்சலத்துக்குட்பட்டதற்கும் எது, இத்திருக்குறளினால் விளங்குகின்றது. அஃதாவது இறைவன் விருப்பு வெறுப்பற்றிருத்தலும், உயிர்கள் விருப்பு வெறுப்புற்றிருத்தலுமே. உயிர்கள் தங்கள் சி

ற்றறிவால் தங்களுக்கு என்றுமழியாத வின்பங்கொடுப்பது இன்ன தே எனத்தேர்ந்து கொள்ளாமல், தாங்கள் செய்யவேண்டிய கர்மங்கள் துன்பத்தைத்தருவதாயின் அவைகளை விலக்கி, அல்லாத கர்மங்கள் தற்காலம் இன்பந்தருவதாயின் அவைகளைச்செய்யவே புண்ணிய பாவங்கள் விளையும். விளைதலும் "இருள்சேரிருவினையும் பற்றும்; பற்றலும்" அடிக்கடி பிறந்திறந்துழலப் பிறப்பின் பிணியறு. ஆகப் பிறப்பின்பிணியறுவதற்கு வழியாது எனில், இரண்டுண்டு. அவையாவன:—இருவினை யொப்படைதலும், பற்றற்றானைபற்றினைப்பற்றலுமே. வேண்டுதல் வேண்டாமையுடைமையும், இன்மையுமே உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ளகண்டிப்பான பேதம். தேவர்கள் வறுமையிற்றுன்புற்று, பொருளைநாடி, திருப்பாற்கடலைக்கடையும்போது, மலையிலுங்கடலிலும் உள்ள சர அசரமாகிய உயிர்கட்கு விளையும் துன்பத்தைக் கருதினார்கள் இல்லை. உயிர்க்கதம் செய்தலே பாவமாகையால், அப்பாவமே விஷமாகத் திரண்டு அவர்களைத்தீய்த்தது. அதில் வெறுப்புற்று வருந்தி நின்று இறைவனை நோக்கி ஓலமிட்டழுதார்கள். உயிர்கள் தங்கள் சுயநன்மையை நாடிச்செல்லும்போது தெய்வத்தை நினைப்பது வழக்கமில்லை. மிடிவரினே 'ஐயோ தெய்வமே இப்படி என்னை விட்டுவிட்டாயே' யென்று கதறுவது. இறைவன் தாயினுமிக்க அன்புடையனாதலின், அவன் அவர்கள் அழுகைக்கு இரங்கி, தற்போதத்தால் விளைந்த பாவத்தைக் கவளமாகக்கொண்டு, அவர்கள் இடும்பையை நீக்கி, தான் பற்றற்றான்; எவ்விதப்பற்றுக்களும் தன்னைப் பற்றாவென்பதையும் விளக்கித் தன்பரதத்துவத்தை நிலைநிறுத்தியவாறுங்காண்க. வேண்டுதல் வேண்டாமையாலேயே இருவினையுண்டாகியவாறு ஆதாம் ஏவாள்சரித்திரத்தினாலும் விளங்குவதாம். யாம் (Tree of knowledge of good and evil. நல்லது தீயதென்றுணரும் மரம்) என்னுந் தலைப்பின் கீழ் எழுதிய வியாசத்திற்கண்டுகொள்க.

மேற்சொல்லிப்போந்த விஷயாதிகளால் இக்குறட்கும், பின்வரும் 'இருள்சேரிருவினையுஞ் சேரா இறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு' என்னும் குறட்குமுள்ள சம்பந்தங்களை ஊகித்துணர்க.

நாம் விருப்பு வெறுப்புற்று அயர்தலும், ஐம்புலவேடர் வழியாகலின், ஐம்பொறிவாய்களையவித்தவுடன், இருவினையும் நம்மைப் பற்ருது பரிசுத்தர்களாவோம். ஆக, இருவினையொப்படைந்தவழி மலபரிபாக மெய்தலும் பெற்ரும். இறைவன் அநாதியே மலத்தினின்றும் நீங்கி நின்ருன் என்பது ஆருந்திருக்குறளாற் பெற்ரும். அவன் வழியே நிற்கவும், நம் வினைகள் அறும் என்பதும் பெற்ரும்.

ஆயின், உலகில் அநேக கடவுளர்கள் உண்டே அவர்களை யெல்லாம் வழிபடல் நன்மை பயக்குமோ என்னும் ஐயத்தை நீக்குதற்கெழுந்தது, ஏழாந்திருக்குறள். வறியர் வறியரிடத்துச் சென்ருற் பயனென்? ஐசுவரியமுடையவனிடத்திற் சென்ருலன்ரே தன் வறுமை மாறும்; அது போல, ஒப்புயர்வற்ற சர்வ ஐசுவரியமுமுடைய ஏகநாயகனிடத்திற் சென்றடைந்தாலன்ரே நம் மனக்கவலையறும். கண்ணனும் கீதையில் ஸோகம் பாவனையால், "அந்தந்தக் கடவுளர்களை யடைந்தவர்கள் அவரவர் உலகத்தை யடைகின்ருர்கள். என்னை யடைந்தவர்கள் பிர்ம்ம நிர்வாணத்தை யடைகின்ருர்கள்". என்றது, இக்காரணம் பற்றியேயன்ரே. உயிர்க் கிரங்கி அருளவே, அவன் அந்தணன் (கருணைக்கடல்) ஆகின்ருன் எனினும், அவன் பக்ஷபாதமில்லாதவனென்பது 'அறவாழி' என்பதனுற் பெற்ரும். "சலமிலன் சங்கரன்" என்ருர் பிறரும்.

மேல்விரித்துக்கூறிய இறைவனது மாட்சிகளை எண்குணமாக வகுத்துக்காட்டினர். அவை வருமாறு—தன்வயத்தனுதல் (சுவதவனே என்றது இருக்கு) தூயவுடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவேபாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாம்.

இக்குணங்களையுடையவனே இறைவன் என்பதும், அவனடிச்சாராதார் பிறவிப்பெருங்கடல் நீந்தாரெனவும், சேர்ந்தவர் நீந்துவர் எனவும் ஆசிரியர் கடைப்பிடித்தார். மேல், உயிர்கள் சிற்றறிவுடையராதலும், அதனுல் வேண்டுதல் வேண்டாமை யுடையராதலும், அதனுல் இருவினைப் பற்றுத்தொடர்பு உண்டாதலும், அதனுல் பிறப்பிறப்புண்டாதலும், உண்மையாக அப்பற்றற்றுப் பற்ற

ற்றான் பற்றினைப்பற்றின் அல்லாது, பற்று விடாதென ஆசிரியர் கருத்தை மேல்விளக்கிக் காட்டினும். ஆகப் பிறவித்துன்பத்துக்கு முதற்காரணமாயுள்ளது உயிர்களது சிற்றறிவேயாம். இதனையே, அறியாமை, அக்ஞானம், அவித்தை யல்லது அவிச்சை, மயக்கம், மருள், ஆணவமெனப் பலசொற்களாற் கூறுவது. இவ்வறியாமையின் தன்மை என்னெனின், இதுதான் பொருளல்லவற்றைப் பொருளென்றுணரலாம். பொருள்களை அதனதன் தன்மையினைத்தெ அறிதல் அறிவாம். ஒன்றை மற்றொன்றாகவும் சந்தேகமாகவும் கோடலே அறியாமையாகும். இவ்வாறையந்திரிபினால் தான் எல்லாத்தீங்குகளும் விளைகின்றன. ஆசிரியர் "பொருளல்லவற்றை" எனாது, "பொருளில்லவற்றை" எனின், பொருள் வேறுபட்டு, மருட்சிகொள்ளற்குக் காரணமாதலும் காண்க. ஆசிரியர் கருத்து, உயிர் உடல்களை இல்பொருளாகக்கொள்வது அறிவின்றி, உடலை உயிராகவும், உயிரை இறைவனாகவும் கொள்ளுதலும்; இநிலையப் படுதலுமே அறியாமை என்பதாம். உலகர் "இறைவன் உளன், இறைவன் உளன்" எனக் கத்திக்கதறினும், அவர்கள் உண்மையான கடவுளாகக்கொண்டது தங்கள் உடலையேயாம். ஒருவன் காலையிற் படுக்கையினின்று எழுந்ததுமுதல் இரவிற் படுத்துறங்கும் வரை செய்யும் முயற்சிகளைக் கணக்கிட்டு ஆராயின் அவைகள் எல்லாம் தன் உடலைக்காக்கும் வழிமுறைகளாம். வேறு உயிரிருப்பதாகவும் தோன்றாத் துணையாகிய கடவுளிருப்பதாகவும் நினைப்பில்லை. நினைப்பிருப்பினன்றோ, அவற்றைப்போற்றும் வழி தேடுவன். தேடினன்றே, பிறவிப்பிணியும் அறும்.

இவ்வறியாமை நீங்கியபின் அடைவதென்னை? தான் அறக்கெடாமல் அடைகின்றவன் தானுமுண்டோ? என ஐயகிழத்தினைர்க்கு, இருள் நீங்கியபின் கதிர்ஒளி பெறுதல் போல, அறியாமை நீங்கி, இறைவனருள் பெற்று வரம்பிலின்பத்திலாழ்தல் அமையும். கதிரவனன்றி இருள் நீங்குதலும் ஒளியுண்டாதலும் அமையாதாகலின், இறைவனன்றி அறியாமை நீங்குதலும், இன்பம் பெறலும் அமையாது. முதலதிகாரத்தில் 3-முதல், 10-வது வரையுமுள்ள திருக்குறள்களிலும் "பற்றுக பற்றற்றான்" என்ற குறளிலும்,

*

"இருள்நீங்கி யின்பம்பயக்கும்" "பிறப்பென்னும் பேதைமைநீங்க" "சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்" என்ற திருக்குறள்களிலும், பதிஞானமின்றிப் பாசக்ஷயம்பெறுதல் அமையாதெனவும், உயிர்கள் உய்வெய்தும்பொருட்டு ஈசுவரன் ஒருவன் நிச்சயமாக வேண்டுமென்றும், ஆசிரியர் வெளிப்படுத்திநின்றார். இதைப் பின்னும் வலியுறுத்தும்பொருட்டேயன்றோ எதிர்மறையான்,

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே, மெய்யுணர் வில்லாதவர்க்கு" என மொழிந்தார். அஃதாவது ஒருவன் புலன்வழிகளை யெல்லாம் அடைத்து, சுத்தமாய், அறவாழி அந்தணனுகி, தாரணைக்கணின்று, இவ்வெய்துதற்கரிய இந்நிலையில் நின்றும், பதிஞானமில்லாவிடின், அவன் வீட்டுப்பேற்றையடையான் என்பதே. இந்த விஷயத்தை மிகவும் ஆழ்ந்து கவனிக்கற்பாலது. ஏனெனில் இக்காலத்து ஐரோப்பாவிற் பெரும்பாலும் தம் வயத்ததாய வழியே போதுமென்னும் பூர்வபட்சமதம் மிகவும் பிரபலமடைந்திருப்பது மிகக்காணக்கூடும். இம்மதமும் ஓர்காலத்து இந்தியாவிலும் பரவியிருந்து பின் முற்றிலும் ஓட்டப்பட்டது. இதன்முன் ஓடிப்போன இம்மதம் பின்னும் ஈங்குத் தலையெடுக்க ஏது உண்டாயிருக்கிறது. இவ்விஷயங்களை யாம் "புத்தமத விசாரணை" யென்னும் வியாசத்தில் விரிவாக வரைந்திருப்பதால் ஈங்கு இம்மட்டில் விடுத்தாம்.

(இன்னும் வரும்.)

ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை.

௨

பன்னிருமாசப்பெயர்கள்.

வைகாசி;—விசாகத்தின் பெயர்கள் முற்றில், வைகாசி, காற்றுநாள், முறம், சுளகு, சேட்டை என ஆறும். வைகாசி என்பது வடமொழியாகிய வைசாகி என்பதன் திரிவு. முற்றில், காற்றுநாள், முறம், சுளகு என்பன தமிழ்ச்சொற்கள். சேட்டை என்பது சேஷ்டா என்னும் வடமொழித் திரிவு; அசைவென்பது அதன்பொருள்;

காற்றின் அசைவு பெரிதுமுடையதென்பது கருத்து. விசாகமென் பது காந்திவியாபகமுடையதெனப் பொருள்படும். விசாகத்துக்கு வடமொழிநிகண்டிலே ராதாவென வொருபெயரேயுளது; அதன் பொருள் சித்தியைத்தருவதென்பது. முற்றில், காற்றுநாள், முறம், சுளகு என்னும் பொருள்பட விசாகத்திற்கு வடமொழிக்கண்வரும் பெயர்களைக் காண்கின்றிலம். முற்றில் முறம் சுளகு என்பன ஒரு பொருட்சொற்கள்; அவை மூன்றும் வடிவும் தொழிலும் பற்றி வந்த பெயர்கள். நக்ஷத்திரமாலையும் "விசாகமாறு மிடிபாழ்ந்துர வாம்" எனக்கூறும். இடிபாழ்ந்துரவும் முறமும் தம்முள் ஒத்த வடிவுடையனவாதல் ஒப்புநோக்குமிடத்துப் புலனும். விசாகத்தோ டுகூடிய பூரணைமாசம் வைகாசி. அது, வடமொழி தமிழில்வந்து வழங்கியகாலத்திலே தொடங்கிய வழக்கு. அதற்குமுன்னர் வை காசிக்குத் தமிழரிட்டு வழங்கிய பெயர் முற்றில் காற்றுநாள் முறம் சுளகு என்பனவற்றுள் ஒன்றினல் முற்றிற்றிங்கள் காற்றுத்திங்கள் முறத்திங்கள் சுளகுத்திங்களென வழங்கினராதல்வேண்டும்.

முன்னே மகம் உத்தரம் என்னு நக்ஷத்திரங்களின் பெயர்களுள் ளே முதலெழுஞ்சனி கடையெழுஞ்சனி என்பனவற்றிற்குக் காரண ங்கூருது விட்டேம். அதனைக்கூறி மேற்செல்வாம். மூலத்திரிகோ ணங்காணுதற்கு மகமே முதல் நக்ஷத்திரமாக வெடுத்துக்கொள்ளப் படுவது. அதற்கடுத்தது பூரம். அதற்கடுத்தது உத்தரம். இப்படி யெடுத்துக்கொள்ளப்படும். அச்சுவினி மகம் மூலம். பரணி பூரம் பூ ராடம். கார்த்திகை உத்தரம் உத்தராடம் எனவரும். முதலெழுஞ் சனி என்பதிற் சனி என்பதன் பொருள் கோணம். ஆகவே முதலெ ழுஞ்சனி என்பதன் பொருள் முதல்வருங் கோணத்திற்குரிய நக்ஷத் திரமென்பதாம். அது மகமாதலின் அப்பெயர் பெறுவதாயிற்று. அடுத்தகோணத்திற்குரியது பூரமாதலின் அஃது இடையெழுஞ்சனி என்னும் பெயர் பெறுவதாயிற்று. அதற்கடுத்ததும் அவ்விராசிக் குக் கடையிலுள்ளதுமாகிய கோணத்துக்குரிய நக்ஷத்திரம் உத்தர மாதலின் அது கடையெழுஞ்சனி எனப்பட்டது. சனி என்பது வடமொழி 'ஸநீ' என்பதன் தற்பவம். அதன்பொருள் கோணம்.

ஆனிமாசம்:—ஜ்யேஷ்டா நக்ஷத்திரத்தோடு பூரணைவரு மாசம் ஆனியெனப்படும். ஜ்யேஷ்டா என்பது தமிழிலே கேட்டையென த்திரிந்து வழங்குகின்றது. கேட்டையின் பெயர்கள் சேட்டை, இந்திராணி, வேதி, தழல், எரி, வல்லாரை என்பன. அவற்றுள், சேட்டை என்பது ஜ்யேஷ்டா என்னும் வடமொழியினது திரிவு. இந்திரன் பிறந்தநாளாதலின் அஃது இந்திராணி எனப்பட்டது. வேதி என்பது யாககுண்டம்; அதுபோலுதலின் வேதி எனப்பட்டது. தழல் என்பது அக்கினிப்பிழம்பு; அதுபோலுதலின் அப்பெயர்பெற்றது. எரி என்பது சுடர்; அதுபோலுதலின் எரி எனப்பட்டது வல்லாரை என்பது வல்லாரையிலை. அதுபோலுதலின் அப்பெயர் கொண்டது. வேதிமுதலிய மூன்றும் வடிவுங்குணமும்பற்றி வந்த பெயர்கள். வல்லாரை வடிவுபற்றிவந்த பெயர். நக்ஷத்திரமாலையும் "கேட்டை நான்கு மீட்டி போலும்" எனக்கூறும். வல்லாரையிலை வடிவத்தால் ஈட்டியையொத்ததேயாம்.

ஜ்யேஷ்டா மாசத்துக்கு வடமொழி நிகண்டில் வரும் பெயர் 'சுக்கிர' வென்பதொன்றுமே. அது "பிராணிகளைத் தவிக்கச்செய்வது" எனப் பொருள்தரும். அக்கருத்தைப்பற்றி உஷ்ணாதிகாரமுடைய மாசமென்னும் பொருள்பட ஆக்னீயமாசமென்பதும் அதற்கோரபிதானமாயிற்று. ஆக்னீயமென்பது தமிழில் ஆனியென்றாயிற்று. எரி, தழல், வேதி என்பனவும் அக்கருத்தேபற்றி வந்தன. சேட்டை இந்திராணி வேதி மூன்றும் வடசொற்கள். எரி, தழல், வல்லாரை மூன்றும் தமிழ்ச்சொற்கள். ஆனி என்னும் பெயர்வழக்குவருமுன்னே தமிழில் அம்மாசத்துக்கு வழங்கிய பெயர்கள் எரி தழல் வல்லாரை என்பனவற்றுள் ஒன்றாதல்வேண்டும்.

ஆடிமாசம்:—ஆஷாடி என்பது தமிழில் ஆடியென வந்தது. ஆஷாடி என்பது ஆடிப்பூரணை. ஆஷாடமென்பது பூராடம் உத்தராடம் இரண்டற்கும் பொதுப்பெயர். பூராடம் பூர்வாஷாடம் என்பதன் திரிவு. உத்தராடம் உத்தராஷாடம் என்பதன் திரிவு. ஆஷாடத்திற் பூரணைவருமாசம் ஆடி எனப்படும். ஆஷாடத்திற்கு வடமொழிநிகண்டில் வரும்பெயர் சுசி என்பதொன்றுமே. சகிக்கலாற்றாத கொடியவுஷ்ணத்தையுடையதென்பது அதன் பொருள். தமிழி

லே பூராடவுத்தராடங்களின் பெயர்கள் உடைகுளம், முற்குளம், நீர் நாள்; கடைக்குளம், ஆனி, விச்சுவநாள், ஆடிஎன்பன. அவற்றுள் முன்னையமூன்றும் பூராடப்பெயர்கள். பின்னைய நான்கும் உத்தராடப் பெயர்கள். உடைகுளம்போலுதலின் உடைகுளம். பூராடமும் உத்தராடமும் முன்னும்பின்னுமாக இருகுளம்போற் கிடத்தலின் முன்னுள்ளபூராடம் முற்குளமெனவும் பின்னுள்ளஉத்தராடம் கடைக்குளமெனவும் பட்டன. நீர்நாள் நீரை அதிகரித்துநிற்குநாள் எனப் பொருள்படும். வராகமிகிரரும் ஆஷாடத்துக்கு அதிகார ஸ்தானமாகக் கிணறுமுதலிய நீர்நிலைகளைக் கூறுவர். விச்சுவநாள் விச்சுவதேவருக்குரிய நாள். ஆனி என்பது எல்லை. சூரியன் வியாபிக்குந்திக்கெல்லையென்பது கருத்து. ஆஷாடமென்பதின் பொருளுமதுவே. உடைகுளம் முற்குளம் கடைக்குளம் என்பன வடமொழிச்சம்பந்த முங் கருத்துஞ் சிறிதுங் கலவாத செந்தமிழ் நிலத்து வழக்காதலின் அவற்றுள் ஒன்றினாலேயே, ஆடியென்னும் பெயர்வந்து வழங்குமுன்னர், அம்மாசம் வழங்கப்பட்டதாதல் வேண்டும்.

ஆவணி:—சிரவணநக்ஷத்திரத்தோடுகூடிய பூரணைமாசம் ஆவணி. சிராவணி என்பது ஆவணி எனத்தமிழில் வந்தது. சிரவணமென்பது தமிழிலே திருவோணமெனவழங்கும். திருவோணத்தின் பெயர்கள் மாயோனாள், உலக்கை, முக்கோல், சிரவணம், சோணை என்பன. இவற்றுள் மாயோனாள், சிரவணம், சோணை என்பன மூன்றும் வடமொழிப்பதங்கள். உலக்கை முக்கோல் என்னுமிரண்டும் தமிழ்ச் சொற்கள். மாயோனாள் என்பது மாயவனுக்குரியதினமெனப்பொருள்படும். சிரவணமென்பது மழைப்பெயலுடையநாளெனப்பொருள்படும். சிரவணம் - பெயல். சுரோணையென்பது தமிழிலே சோணையெனவந்தது. அதன் பொருள் கூட்டம். மேகக்கூட்டமுண்டாகுநாளென்பதுகருத்து. உலக்கைபோலுதலின் உலக்கையெனப்பட்டது. "ஓணமூன்று முலக்கைபோலும்" என்றார் நக்ஷத்திரமாலைநூல் செய்தாரும். முக்கோல்போலுதலின் முக்கோலெனப்பட்டது. முக்கோலென்பது திரிதண்டு. அஃதாவது அடுக்கிலொருசேரத் தலையிடைகடை மூன்றிடத்துங் கட்டிய மூன்று கோல்கள். அது சந்நியாசமுத்திரை. மனம் வாக்குக் காயமென்னு மூன்றையுமடக்கியாளுதல் சந்நி

யாசத்துக்கு இன்றியமையாவிலக்கணமாதலின் அதன் அறிகுறியாகச் சந்நியாசிகள் திரிதண்டுதரிப்பர். திரிதண்டின் தலை யிடை கடை மூன்றிடத்துமுள்ள பூண்போலத் திருவோணநக்ஷத்திர மூன்றும் விளங்குதலின் அஃதப்பெயர் பெறுவதாயிற்று. வடமொழிமாக்கள் திருவோணத்துக்குத் திரிதண்டை உவமிக்கத், தென்மொழிமாக்கள் தமது நிலத்தில் அதற்கு உவமையாகக்கண்டது உலக்கையேயாம். ஆகவே முக்கோலென்பது தமிழ்ச்சொல்லேயாயினும் வடசொல்லாகிய திரிதண்டின் மொழிபெயர்ப்பாதலின் உலக்கையொன்றுமே பூர்வத்திலே தமிழ்மக்கள் திருவோணத்திற்கு இட்டுவழங்கிய பெயராம். ஆதலால் ஆவணிக்கு அந்நாள் அவரிட்டுவழங்கிய பெயர் உலக்கைத் திங்களென்பதேபோலும்.

(இன்னும் வரும்.)

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

ஸ்ரீ:

அங்கச்சேதன சாஸ்திரம்.

ANATOMY.

அங்கமென்பது உடல். சேதனமென்பதுபிரிவு. ஆக, அங்கச்சேதனமாவது உடலைச் சேதித்து, அதன் வெவ்வேறு பாகங்களைத் தொழிலிற் கேற்றபடி பிரித்துப் பரீக்ஷித்தலாம். எவ்விதமெனில் பொழுதைக் காட்ட வல்லதோர் கடிகாரத்தைக் கைக்கொண்டு அதுமுழுவதும் அங்கியாக வெண்ணி, அதனங்கத்தில் யாதாயினும் சற்றுக் கெடுதிநேரிட்டிருப்பின் அதன் பலபிரிவுகளாகிய மேற் கண்ணாடி, முட்கள், எண்ணைக்கொண்ட மேற்றட்டு, இவற்றின் கீழ் உட்புறத்துள்ள யந்திரச் சேர்க்கைக்கு உதவுவனவாகிய பலவகைச் சக்கரங்கள், ஆணிகள், சுற்றுக்கம்பிகள் முதலியவைகளை வேறுபடுத்திப் பரிசோதிக்கின்றமுறையே, ஜீவஜந்துக்களினுந் தாவரப் பொருள்களினும், அங்கவியல்பைப்பரிசோதிக்கும்வண்ணம் அவற்றவற்றின் அவயவங்களை வேறுபடுத்தி, மற்றும் ஒவ்வோரவயவத்தை

யுந் தனியாக வெடுத்து அதன் நுண்ணிய பாகங்களை வெற்றுக் கண்ணினாலும் பூதக்கண்ணாடியின் மூலமாயும் பார்த்துத் தெளிய வல்லதேயாம். ஆனால், கெடுதியடைந்ததோர் கடிகாரத்தைச் சீர்திருத்துவதற்காகப் பலவாறு நீக்கிப்பரிசோதித்தபின், அக்கடிகாரம் சுயவுருவத்தை மேற்கொண்டு ஓடுமாறு அவ்யந்திரத்தை நடப்பிப்பதுபோல, ஜந்துக்களின் அல்லது தாவரப்பொருள்களின் உடலை ஓர்தரம் வெவ்வேறாகச் சேதித்தபிறகு அவற்றை ஒன்றுசேர்த்து அவற்றின் சுய உருவத்தைத் திரும்ப உண்டாக்கி ஜீவனைச் செலுத்துவது சாத்தியமல்ல. ஆனாலும், மனிதன்முதல் எரும்பீறாகவுள்ள சகல பிராணிகளையும் மரஞ் செடி இலை காய்முதலிய சுத்த மூலபதார்த்தங்களையும் ஒருவாறு தேர்ந்தறியும்வண்ணம் சிறுகுழந்தைகள் யாதாயினுமோர் பொருளைத் தொட்டால் அப்பொருளினியல்பையும் அமைப்பையும் வெகு உற்சாகத்துடன் கண்டறியச் சின்னங்களாய்த் தூண்டிப்பதுபோல, நமது ஐம்புலன்களுக்கும் எளிதில் அணுகவொண்ணாத இரகஸ்யங்களைச் சேதித்தாயினுங் கற்க விருப்பங்கொண்டு, அகன்றகல்வியிலனுப்பிரமாணங் கற்றுவரும் மானிடராகிய யாம் ஞானத்திற் சிறுவர்களாய் உற்சாகத்துடன் சேதித்தாயினுங் கற்க முயலவேண்டியதாகின்றது. இவ்வாறு பொருள்களைச்சேதிப்பதில், சேதிக்கும்வழி ஒன்றேயாயினும் பொருள் ஒன்றேயாயினும், பலவித நோக்கங்களை மேற்கொண்டு சேதிக்கக்கூடுமாகையால், அவ்வந்நோக்கத்திற்கேற்பவும் தொழில்நோக்கத்திற்கும் பொருளுக்குமேற்றபடியும் பெயரும் மாறிவரவேண்டியிருக்கிறது. இதற்குதாரணமாக அடியில் வருமாறு விஷயங்களைக் கண்டறிவோம்.

பிராணிகளின் தேகவமைப்பைப் பரிசோதித்து அவ்வமைவிற்குத் தக்க தொழிலைக்கண்டு கற்கலாமாகையாலும், தோற்றத்திற்குப் பலவழிகளிலொற்றுமையுடைய பிராணிகள் எவ்வெவ்விதங்களில் வித்தியாசப்படுதலால் அவைகளுக்குட் செயல்வேறுபாடு உண்டாகின்றதென்று சந்தேகம் சிறிதுமின்றி ஊகிக்கலாமதலாலும் ஒவ்வொருவகைப் பிராணியையும் சேதித்துப்பரிசோதித்தல் கல்வித்திறத்திற்கு இன்றியமையாததோர் மார்க்கமாகக் கருதப்படுகிறது. பிராணிகளில் தலைமைபூண்ட மானிடரின் யாக்கையமைப்பைக் கற்க

வேண்டுங்கால், ஓர் மனித தேகத்தைப் பரிசுஷிக்கவேண்டி வெறுப்பில்லாது அவ்வுடலைச் சேதித்துத்தான் பார்க்கவேண்டும். நாம் உட்கொள்ளுமன்னமானது எவ்வாறு வாயின்வழி உடலைச்சேர்ந்து நமது அவயவங்களைச் சோர்வடையாமற் காத்து உதவுகின்றதென்பதைத் தேடித்தெரிய, நமது உடலினுள்ள பைகளையும், குழாய்களையும், நரம்புகளையும், மாமிசங்களையும், குருத்தெலும்புகளையும் (Cartilage) மற்ற எலும்புகளையும், நிணம் அல்லது கொழுப்பு (Fat or Adipose tissue), அவ்வவ்விடத்து உற்பத்தியாகும் பலவித ரஸங்கள் (Juices) ஆகிய இவைகளையும் இவைபோன்ற மற்றெவைகளையும் தெளிவாகப் பார்த்துப் பரிசோதித்தாலொழிய உண்மை புலப்படாதாகையால், வெறுப்பைவிட்டு மனிதவுடலைச்சற்றுச்சேதித்துத்தான் பார்க்கவேண்டுமென்னும் துணிவுடன் முயலவேண்டும். இத்தகைய மனிதவுடலைச் சேதித்து அதன் வெவ்வேறு பாகங்களைக் கண்டறிந்து அதனால் அவ்வுடலின் செயற்கை, உருவம், அமைப்பு ஆகிய இவைகளைக்குறித்துக் காணவல்ல ஞானத்திற்கு மனுஷாங்கச்சேதனம் (Anthropotomy) என்று பெயராகும்.

மானிடருக்குக் கீழ்ப்பட்ட பிராணிகளின் வகைகள் விசேஷித்துளவாகையால் அவைகளின் அங்கச்சேதன சாத்திரத்திற்கு ஒரேபெயரிட்டு அதைப் பொதுவாக மிருகாங்கச்சேதனமென்ற பொருள்பட ஆங்கிலேயத்தில் "Zootomy" என்பர். மிருகாங்கச்சேதனமும் முன்கூறியவாறே அவ்வம்மிருகத்தின் உடற்செய்கை, உருவம், அமைப்பு ஆகிய இவைகளைத் தெற்றெனக் கூறுதலேயாம். ஆனால் மிருகாங்கச்சேதனமென்னும் பெயர் பொதுப்பெயராயினும் அப்பெயர்க்குட்பட்டுத்தனிப்பெயராக ஒவ்வோர் மிருகத்தினங்கச்சேதனத்தை எடுத்துச் சொல்லத்தகும். உதாரணம்:—அசுவாங்கச்சேதனம் (Equine anatomy or anatomy of the body of the horse), கஜாங்கச்சேதனம் (Elephantine anatomy or anatomy of the body of the Elephant), மேஷாங்கச்சேதனம் (anatomy of the body of the sheep) ரிஷபாங்கச்சேதனம் (anatomy of the body of the ox or bovine anatomy) முதலியன. மேல்சொல்லிய உதாரணங்களில் ஒவ்வொன்றும் பிரதியேகாங்கச்சேதனமென்று

மொழிபெயர்க்கத்தக்கதோர் (Special anatomy) சாத்திரமார்க்கமா ம். இரண்டு வஸ்துக்களைப்பரிசோதித்து அவைகளைச் சிறிதும் சந்தேகமின்றி அறிந்துகொள்ளவேண்டுமானால் அவற்றின் ஒற்றுமையினும் வேற்றுமையே தெளிவாக நமது அறிவிற்கு நன்கு விளங்கவேண்டு மாகையால், அத்தகைய ஒற்றுமை வேற்றுமைகளை யெடுத்துக்காட்டவல்ல அங்கச்சேதனத்திற்குத் தனிப்பெயர் கொடுத்துக் கூறுவர். அதை ஆங்கிலேயத்திற் சுருக்கி (Comparative anatomy) என்பர். மேற்கூறிய பிரதியேகாங்கச்சேதனம், ஒற்றுமை வேற்றுமையைக் காட்டவல்ல பேதாபேதாங்கச்சேதனம் ஆகிய இவை, மிருகங்களுக்கு மாத்திரமின்றித் தாவரப் பொருள்களுக்குமுள. ஆதலால் மிருகங்களைச்சேதித்துக் கற்குமாறு தாவரப் பொருள்களையுஞ்சேதித்துக் கற்கத்தகுமென்பதை எளிதில் அறியலாகும். மனிதர், மிருகங்கள், தாவரப்பொருள்கள் ஆகிய இவைகளின் வாழ்க்கைக்கின்றியமையாதனவாகிய அவற்றின் பிராணன், உருவம், தேகவியற்கை, வளர்ச்சி, பாப்பு முதலான அம்சங்களை யெடுத்துக்கூறும் சாத்திரத்திற்கு ஜீவதத்துவமென்று பொருள்படத்தக்க ஆங்கிலேய 'Biology' என்று பெயர். அதன்கீழ் வெவ்வேறு பிரிவுகளாக முன்கூறிய மனுஷாங்கச் சேதனமும் மிருகாங்கச்சேதனமும் மற்றும் தாவராங்கச்சேதனமும் (Phytotomy) காணப்பெறுகிறோம். ஆனால் தாவராங்கச்சேதனத்தைத் தாவரசாத்திரத்தில் (Botany) ஓர்பாகமாகக் கருதி அதனுடன் வைக்கத்தக்கது.

பிரதியேகாங்கச்சேதனமென்பதை முன்னமேயே கண்டறிந்தோம். அதன் விவரமாக அடியில் வருமாறு பலவிதநோக்கங்களை முதன்மையாகக்கொண்டு கருதுதல் விசேஷமாதலால் அவ்வந்நோக்கத்திற்கேற்பப் பெயர் கொடுத்து அவற்றில் ஒவ்வொன்றும் எவ்வாறு ஜீவன்களுக்கும், தாவரங்களுக்கும் பொதுவாகவே நின்று கல்வியை விர்த்திசெய்யத்தக்கதென்பதைக் கண்டுகளிப்போம்.

முதலாவது.—கருவுற்றகாலமுதல் யுத்தவயதையடையும்வரையில் ஆங்காங்குச் சிசுவினிடத்துத்தோன்றவல்ல தேகவளர்ச்சியினால் குமுருவக்காட்சியை ஆரம்பமுதல் கிரமமாகத் தொடர்ந்து பார்த்தறியும் மார்க்கத்திற்கு அங்கத்தோற்றச் சேதனம் (Developmental

*

or Embryological anatomy) என்று கூறத்தகும். இதற்கோருதாரணமென்னவெனில், குழந்தையானது, பிறந்தவுடன் மெய்வாய் கண் மூக்குச் செவிகளின் காரியங்களாகிய உணர்தல், பேசுதல், பார்த்தல், மோத்தல், கேட்குதலாகிய இச்செய்கைகளைச் சிறிதுமறியாமல், மெய்யிருந்துந் தக்கபடி உணராமலும், வாயிருந்தும் பேசாமலும், கண்ணிருந்தும் பார்க்காமலும், மூக்கிருந்தும் மோவாமலும், காதிருந்துங் கேட்காமலும் நிலையற்றதுபோற் காணப்படுகிறது. ஆனால் உத்தேசம் 6-மாதகாலமானபின் மேற்கூறிய அவயவங்கள் வளர்ச்சிபெற்று உபயோகத்திற்கு வந்துள்ளனவாகையால், குழந்தையானது சற்று உணரவும், பேசவும், பார்க்கவும், கேட்கவும் முயலுகின்றது. இத்தகைய காலத்திற்கேற்ப வளர்ச்சியாலாகும் உருவத்தோற்றத்தைக் கிரமமாக விசாரித்தறியவல்ல சேதனத்தொழிலுக்கு அங்கத்தோற்றச் சேதன மென்னலாம்போலும்!

இரண்டாவது ;—சாதாரணமாக நமது அனுபோகத்தில் யாதோர் உறுப்பை நாம் விசேஷித்துபயோகிக்கின்றோமோ அவ்வுறுப்பானது திரட்சியையடைகிறதென்பதைப் பார்த்து வருகிறோம். உதாரணம் :—செம்மட்டியைக் கையிலெடுத்து ஓங்கிப் பலதரம் அடிக்குந் தொழிலையுடைய கொல்லனது கையைப் பார்த்தால் திரண்டு உருண்டு கெட்டியாயிருக்கும். சதாகாலமுமிரைக்காக ஓரிடத்திலிருந்து எங்கும் பார்த்துக்கொண்டிருக்குங் கழுகுக்குக் கண் கூர்மையையடைந்திருக்கும். ஆதலால் அவ்வப்பிராணிவகைக்கு அவ்வவ்வுறுப்புக்கள் அமைந்திருக்குமிலக்கணத்தையும் அவ்வவ்வுறுப்பினது உருவத்தையும்பற்றி விசாரிக்குங்கால் அதனல் நாம் அறியத்தகும் நியாயத்தை யெடுத்துக்காட்டவல்ல சேதனமார்க்கத்திற்கு அங்கவுருச்சேதன மென்று (Morphological anatomy) பெயரிடத்தக்கது.

மூன்றாவது :—யாதொரு ஜீவனது அல்லது தாவரப்பொருளது கிளையை அல்லது உறுப்பைத்தொட்டு அவ்வுறுப்பின் ஓர்பாகத்தை பரீக்ஷித்து அதன்செயல், உபயோகம், பயன் ஆகிய இவற்றைச் சொல்லவல்லமோ அதை அங்ககுணச்சேதனமென்று (Physicological anatomy) சொல்லுவோம். உதாரணம் :—ஓர் மாட்டின் உடலைத்திறந்து அதன் வயிற்றிலுள்ள ஆகாரப்பையைப் (Stomach)

பரிசோதித்துப் பார்த்தால் நான்கு அறைகளிருக்கப்பார்க்கிறோம். அப்பையில் ஒவ்வோரறைக்கும் ஒவ்வோர்செயலிருப்பதால் அதனதன் செயலுக்கேற்றபடி உபயோகத்தையும் பயனையுங் காணவல்லோம். ஓர் மாடு புல்லைமேய்ந்தால், புல்லை ஆகாரப்பையின் ஓரறையிற் சேகரித்து அதன்பின் ஓரிடத்திலிருந்து முன்உட்கொண்ட இரையையெல்லாம் மீண்டும் பையைவிட்டு வாயில்வாங்கிக்கொண்டு கடித்துக்கடித்துச் சிறுதுண்டுகளாக்கி இரைப்பையின் மற்றோர் அறைக்குட்டள்ளிவருகிறது. இச்செயலைச் சாதாரணமாய் அசைபோடுதலென்று சொல்வதுண்டு. இவ்விதம் உடலைத்திறந்து இரைப்பையைப் பரீக்ஷிக்கும் மார்க்கத்திற்கு அங்ககுணச்சேதனமென்று சொல்லலாகும். மேலும் ஓர் புஷ்பத்தின் இதழ்களுக்கு மத்தியிலுள்ள அல்லித்தாளை (Pistil) மெதுவாகத் திறந்துபார்த்தால் அஃதோர் குழாயாகவும் அதனுட் கையில் ஒட்டவல்லதோர் ரஸம்பரவவும் அக்குழாயின்வழியே மகரந்தப்பொடி (Anther) உள்ளேசென்று அண்டகோசத்தை (Ovary) அடைகிறதென்றும் பார்த்துத் தெளிவதும் அங்ககுணச்சேதனமாம். இவையெல்லாம் வைத்தியசாத்திரத்திற்கு உதவுவன.

நான்காவது :—ஒருவன் நேராகநின்றால் அவனது கழுத்துமுதல் அரை அல்லது இடுப்பு ஈறாகவுள்ள நடுவிடத்தில் எவ்வெப்பாகங்களில் எவ்வெப்பைகளுளவென்றும், ஓர்பைக்கு எப்பக்கத்தில் எந்நிலையில் மற்றோர் பையுள்ளதென்றும் தெளிவாய் அறிவதற்கு உடலைத்திறந்துதான் பார்க்கவேண்டும். இத்தகைய நோக்கத்திற்கேற்ற உடற்சேதனத்திற்கு அங்கநிலைச்சேதனமென்று பெயரிட்டு கூறத்தகும் (Topographical anatomy). உதாரணம்:—இதயம் (Heart) மனிதனது இடப்பக்கத்துள்ளது, மார்பின்கணுள்ளது. ஈரல்(Liver) இரைப்பைக்குமேலே வலப்பக்கத்துள்ளது; முதலியவை. இதுவும் வைத்தியத்திற்குதவுவது.

ஐந்தாவது :—ஓர் பெருங்கட்டிடத்திற்குச் செங்கல், சுண்ணம்பு முதலியவற்றை அற்பமாயிருப்பினும் எவ்வாறு ஆதாரப் பொருள்களாக நாம் எண்ணுகிறோமோ, அவ்வாறே நமது பெருங்கட்டிடமாகிய உடலுக்கு எலும்பு, குருத்தெலும்பு, இரத்தம் முதலியவைகளை ஆ

தாரப்பொருள்களாகக் கருதவேண்டும். இவ்வாதாரப் பொருள்களை இங்கிலீஷில் "Tissue" என்பர். இப்பொருளைக்காண வெகுநுட்பமாய்ப் பரிசோதிக்கவேண்டியிருப்பதால் பூதக்கண்ணுடியை உபயோகிப்பதுண்டு. இப்பரிசோதனை அங்கத்தின் நுட்பபாகங்களைப் பரிசோதிப்பதாகையால் இதை நுட்பவங்கச்சேதனமென்று (Micros copic or Minute anatomy) கூறலாகும். உதாரணம்:—மயிரளவுள்ள இரத்தக்குழாய்கள் உடம்பில் ஓடுகின்றன. மேலும் உருளைக்கிழங்கின் பசையாவானது (Starch) பூதக்கண்ணுடியின்கீழ் வைத்துப்பார்த்தால் உருளைவடிவினதாய்ப் புலப்படுகிறது.

ஆருவது:—யாதாயினுமோர் வியாதியானது உடம்பைத் தாக்கினுல் உடம்பினுள் மாறுதலைச் செய்கிறது. இத்தகைய மாறுதலைப் பரிசோதிக்கும்வண்ணம் இந்நோக்கத்திற்கேற்றபடி உடலைச்சேதித்தறிதல் குகரணங்கச்சேதனம் (Pathological anatomy). உதாரணம்:—ஒருவன் அன்னத்தைத் தினந்தோறும் நன்ருகவுண்டு அதற்கேற்ற செயலைச் செய்யாவிடின் அவ்வன்னம் ஜீரணமாகுதல் கடினம். இக்காரணத்தால் நாளடைவில் ஜீரணசக்தி குறைவுபட இரத்தம் வறண்டு இரைப்பும் தேகத்திலோர்வெளுப்புமுண்டாகி அசௌக்கியமுமேலிட்டுநிற்கும். இதன்காரணத்தைப் பரிசோதிக்கவேண்டிச் செலுத்தும் செயலுக்குக் குகரணங்கச்சேதனமென்று பெயர்.

ஆதலின் அங்கச்சேதனத்தின் பயனையும், அதன் வேறுபாடுகளாகிய பலவிதச்சேதனங்களையுந் தேர்ந்தறிவது கல்விக்கு இன்றியமையாததாம்.

சே. வீ. இராஜகோபாலாசாரி.

சிவமயம்.

இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

[௨௫௯-ம் பக்கத் தொடர்ச்சி.]

கங்கைப்படலம்.

பெண்ணி னோக்குஞ் சுவையிற் பிறர்பிறர்க்
கெண்ணி நோக்கி யியம்பரு மின்பத்தைப்
பண்ணி னோக்கும் பராவமு தைப்பசுங்
கண்ணி னோக்கின ருள்ளங் களிக்கின்றார்.

என்னும் ௧௧-ம் செய்யுளில், 'பெண்ணி னோக்குஞ் சுவையிற் பிறர்பிறர்க்கு' என்பது 'பெண்ணி னோச்குஞ் சுவையிற் பிறர்பெறற்கு' எனக்காணப்படுகின்றது. 'பிறர்க்கு' என்பது பொருள்கொள்ளுமிடத்துச் சிறிதும் பொருத்தமின்மையின் 'பெறற்கு' என்பதே பொருத்தமுடைத்து. சிந்தையு மொழியுஞ்செல்லாநிலைமைத்தாகலின், 'பிறர்பெறற், கெண்ணிநோக்கியியம்பருமின்பம்' என்றார். சுவையின் என்பதில் இன் உவமப்பொருட்டு.

இக்கங்கைப்படலத்து ௩௭-ம் செய்யுளின் சந்தமும், ௩௮-ம் செய்யுளின் சந்தமும் வேறாகக்காணப்படுதலின், ௩௮-ம் செய்யுளின்முன் 'வேறு' என இடவேண்டும். அங்ஙனமே பிரதிகளிலும் காணப்படுகின்றது. அதுவுமன்றி அச்செய்யுளின்முன்னே,

நின்றா னெஞ்சி னிரம்புறு மன்பா
லின்றே நின்பணி செய்திட விறைவா
நன்றே வந்தன னாயடி யேன்யான்
என்றே கூவின னெயினரி னிசையோன்.

என்னும் செய்யுள் ஒன்று காணப்படுகின்றது. இச்செய்யுள் 'கூவாமுன்னம்' என்பதற்கும் பொருத்தமுடைத்தாய் வருதலின் ஈண்டுக்கொள்ளப்படத் தக்கதே. மூப்பத்தெட்டாஞ் செய்யுளில் 'நாயடியேனென்றான்' என்பது 'நாயகவென்றான்' எனக்காணப்படுகின்றது. இச்செய்யுளிலும் 'நாயடியேன்' எனவருதலின் அதில் அங்ஙனம் வருதலே பொருத்தமுடைத்து. இன்னும் இப்படலத்து ௪௫-ம் செய்யுளின் பின்னே,

அடிதொழு துவகைதூண்ட வழைத்தன ஞழியன்ன
துடியுடைச் சேனைவெள்ளம் பள்ளியைச் சூழவேவி
வடிசிலை பிடித்துவாளும் வீக்கிவா யம்புபற்றி
யிடியுடை மேகமென்ன விரைத்தவண் காத்துநின்றான்.

என்னும் செய்யுள் ஒன்று காணப்படுகின்றது. அதுவும் ஆண்டுப் பொருத்த முடைத்தாதல் காண்க. 'இடியுடை மேகமென்ன வினையடி யெய்திநின்றான்' எனவும் பாடமுண்டு.

வனம்புகுபடலம்.

வெளிறு நீங்கிய பாலையை மெல்லெனப் போனர்
குளிறு வான்மதிக் குழவிதன் சூல்வயிற் றெளிப்பப்
பிளிறு மேகத்தைப் பிடியெனப் பெரும்பணைத் தடக்கைக்
களிறு நீட்டுமச் சித்திர கூடத்தைக் கண்டார்.

என்னும் ௬௭-ம் செய்யுளில், 'குளிறுவான்மதிக் குழவிதன் சூல்வயிற் றெளிப்ப' என்பது 'குளிறுவான்மதிக் குழவிதன் சூல்வயிற் றுதைப்ப' எனக் காணப்படுகின்றது. 'ஒளிப்ப' என்பது பிளிறுதற்கு ஏதுவன்மையின் 'உதைப்ப' என்பதே பொருத்தமுடைத்தாதல் காண்க.

சித்திரகூடப்படலம்.

மாலைவந் தகன்றபின் மருங்கி லாளொடும்
வேலைவந் துறைவிட மேய தாமெனக்
கோலைவந் தமிழ்சிலைத் தம்பி கோலிய
சாலைவந் தெய்தினன் றவத்தி னெய்தினன்.

என்னும் ௬௫-ம் செய்யுளில், 'வேலைவந் துறைவிட மேய தாமெனக், கோலைவந் தமிழ்சிலைத் தம்பி கோலிய, சாலைவந் தெய்தினன் றவத்தி னெய்தினன்' என்பது 'மேலவனிருந்திடவிரும்பியேமனங், கோலிநற்குணத்தி னங்குரிசிலாங்கொரு, சாலையைவகுத்தமைசாற்றுவாமரோ' எனக்காணப் படுகின்றது. பின்னே சாலைசெய்தமையும், குடிபுக்கமையும் கூறப்படுதலின் பின்னையதே பொருத்தமுடைத்து.

பள்ளியடைப்படலம்.

பண்டி யங்கள் பரந்தன பல்லியங்
கொண்டி யம்பின கொண்டலிற் கோதையில்
வண்டி யம்பின வாளியின் வாவுறுஞ்
செண்டி யங்கு பரியுஞ் செறிந்தவே.

என்னும் ௧௧-ம் செய்யுளில், 'பண்டியங்கள் பரந்தன' என்பது 'பண்டியெங்கும் பரந்தன' எனக்காணப்படுகின்றது. 'பண்டியங்கள்' என்பது பொருத்தமின்மையின் 'பண்டியெங்கும் பரந்தன' என்பதே பொருத்த முடைத்து.

ஷ

வில்லின் வேதியர் வாள்செறி வித்தகர்
மல்லின் மல்லர் சுரிகையின் வல்லவர்
கொல்லும் வேல்குந்தங் கற்றுயர் கொற்றவர்
தொல்லை வாரணப் பாகருஞ் சுற்றினர்.

என்னும் ௧௩-ம் செய்யுளில் 'மல்லின்மல்லர்' என்பது 'மல்லின் வல்லர்' எனக்காணப்படுகின்றது. 'மல்லின்மல்லர்' என்பது பொருட்சிறப்பின் மையின் 'வல்லர்' என்பதே பொருத்தமுடைத்தாதல் காண்க.

ஷ

அன்ன தன்மை யகநகர் நோக்கினன்
பின்னை யப்பெரி யோர்தம் பெருந்தகை
மன்னன் வைகும் வளநகர் போலுமீ
தென்ன தன்மை யிளையவ னேயென்றான்.

என்னும் ௩௬-ம் செய்யுளில், 'பின்னை யப்பெரி யோர்தம் பெருந்தகை— மன்னன்வைகும்வளநகர்போலுமீது' என்பது 'பின்னினைகபெரிதப் பெருந் தகை—மன்னரின்றியமாநகர்போலுமீது' எனக்காணப்படுகின்றது. 'மன் னன்வைகும் வளநகர்போலும்' என்பது பொருள்கொள்ளுமிடத்துச் சிறந் துகாட்டாமையின் பின்னையதே பொருத்தமுடைத்தாதல் காண்க. முன் தான் பார்த்துவந்த தன்மைகளாலே 'மன்னரின்றிய மாநகர்போலும்' என ஐயுற்றுக் கூறினன் என்க.

ஷ

கொடியவர் யாவருங் குலங்கள் வேரற
நொடிகுவன் யானது நுவல்வ தெங்ஙனங்
கடியவள் வயிற்றினிற் பிறந்த கள்வனேன்
முடிகுவ னருந்துயர் முடிய வென்னுமால்.

என்னும் ௧௧-ம் செய்யுளில், 'முடிகுவன்' என்பது 'முடிகிலன்' எனக் காணப்படுகின்றது. 'கொடியவர் யாவரையும் கொல்வேன். கொடியவளாகிய கைகேசியின் வயிற்றிற் பிறந்த கொடியகள்வனாகிய நான்மாத்திரம் முடிகின்றிலேன்' என்னுமிடத்துப் பொருட்சிறப்புண்மையின் 'முடிகிலன்' என்

பதே பொருத்தமுடைத்து. முடிகுவன் என்பதிற் பொருட்சிறப்பின்மை காண்க. 'அது நுவல்வதெங்ஙனம்' என்பதற்கும் பின்னையதே பொருத்தமுடைத்து. 'கொடியவர் யாவருங் குலங்கள் வேரற' என்பதும், 'கொடியவர் யாவரக் குலங்கள் வேரற' எனக்காணப்படுகின்றது. பின்னையதே பொருள் வலியுடைத்தாதல் காண்க.

௯

எஃகெறி செருமுகத் தேற்ற தெவ்வருக்
கொஃகின னுயிர்வளர்த் துண்ணு மாசையான்
அஃகலி லறநெறி யாக்கி யோன்பொருள்
வெஃகிய மன்னர்வீழ் நரகின் வீழ்கயான்.

என்னும் ௧௦௬-ம் செய்யுளில், 'அஃகலி லறநெறி யாக்கி யோன்பொருள்' என்பது 'அஃகலி லறநெறி யகற்றி யொண்பொருள்' எனக்காணப்படுகின்றது. முன்னையதினும் பின்னையதே பொருட்சிறப்புடைத்தாதல் காண்க.

அழிவரு மரசிய லெய்தி யாகுமென்
றிழிவரு சிறுமொழி லியற்றி யாண்டதின்
வழிவரு தருமத்தை மறந்து மற்றொரு
பழிவரு நெறிபடர் பதக னாகயான்.

என்னும் ௧௦௭-ம் செய்யுளில் 'அழிவரு மரசிய லெய்தி' என்பது 'அழிவரு மரசிய லகற்றி' எனக் காணப்படுகின்றது. 'எய்தி' என்பதிற் பொருட்சிறப்பின்மையின் 'அகற்றி' என்பதே சிறப்புடைத்து. அழிவற்ற அரசின் முறையை நீக்கி என்பது பொருள்.

(இன்னும் வரும்).

சி. கணேசையர்.

தனிச்செய்யுட்கோவை.

:o:

[உகூஎ-ம் பக்கத் தொடர்ச்சி.]

திருநெல்வேலிக்குச் சமீபமான ஓமநல்லூர் அனந்தபத்மநாத பிள்ளை என்னும் ஓர் பிரபுவானவர் தம்மைக் குடியிறைப்பணத்திற்காகச் சிறைவைத்திருக்கும்போது வந்து ஓர் கவிஞரிக்கவியைக்கூறக் கேட்டு அவர்மனை முழுவது நெற்கொண்டு குவிக்கும்படி செய்தனர். இதையறிந்த அதிகாரிகள் வியந்து, இறையை நீக்கி விடுத்தனர்.

குலைவைக்குஞ் செங்நெல்வய னல்லூர்ச்சங் கரமூர்த்தி குமாரா மன்னர்
தலைவைக்குங் கிள்ளாக்கை யனந்தபற்ப நாபாவென் றன்மை கேளாய்
விலைவைக்குங் கடையரிசி வாங்கியுண்ண முடியாதென் வீட்டி லிப்போ
துலைவைக்கச் சொல்லிவந்தே னெற்கொடுத்தா லரிசிகுத்தி யுண்ண லாமே.

இக்கவி அக்கவிஞர் பின்னர்க்கூறியது.

எந்தக்கா லமுமனந்த பற்பநா பன்சுகமா யிருக்கவேண்டும்
வந்தக்கா லவன்றனக்கே மகத்தான பெருஞ்செல்வம் வரவும்வேண்டும்
பந்தற்கால் போலுயர்ந்த பருத்திருக்கு மடையர்தமைப் பாடியொன்று
தந்தக்கா லென்னதரா திருந்தக்கா லென்னசொல்லுந் தமிழ்ச்சொல் வீரே.

இக்கவி, சிறுவிலைக்காலத்திற் றம்மைக்காத்த மன்றுளாடியபிள்ளையின்மீது ஓர் கவிஞர் கூறியது.

ஏகா தசியுஞ் சிவராத் திரியுமென் னில்லைவிட்டுப்
போகா திருக்கின்ற நாளினி லேயென் புதல்வர்வற்ற
லாகாமற் றங்கையென் பாகாமல் யானு மகத்தவளுஞ்
சாகாமற் காக்கவல் லான்மன்று ளாடுந் தயாநிதியே.

இவ்வெண்பா ஓர் கவிஞர் கூறியது; ஆண்டான் கவிராயர் கூறியதென்பர் சிலர்.

உக்ராணப் பையனுமோ வொன்றுதந்தா லொன்றுதரா
னக்ராரச் சேஷியுமோ வப்படித்தா—னிக்கறியி
னுப்பா புளியா வொருகறியு நீர்மோரு
மப்பாவீ தாராலே யாம்.

இக்கவி ஆண்டான் கவிராயர் கூறியது.

வாயெரியக்கையெரியவயிறெரியச்சட்டிவைத்துவறுத்துக்கொட்டிக்
காயெரியக்கடினமுடனரைவயிற்றிற்கன்னமிட்டகடினக்காரி
தாயெரியமகளெரியச்சேஷியெனுமொட்டைமுண்டைதலைமேற்பற்றித்
தீயெரியக்கண்டக்காலெனதுடையவயிற்றெரிச்சறீருந்தானே.

இக்கவி வடகரையில் ஓர் புலவர் செங்கோட்டைக்கு மேற்குள்ள ஆரியன்காவில் ஐயனர் தெரிசனம்பண்ணும்போது கூறியது.

ஊராரைப் பின்சொல்லி!யுற்றாரைப் பின்சொல்லி யொன்றெனினுந்
தாராரைப் பின்சொல்லித் தந்தாரைப் பின்சொல்லிச் சற்றுமுகம்
பாராரைப் பின்சொல்லிப் பார்த்தாரைப்பின் சொல்லிப் பாழ்த்தகும்பிக்
காராரைப் பின்சொல்லு வேன்றிரு வாரியங் காவையனே.

இக்கவி ஓர் கவிஞர் விநோதமாகக் கூறியது.

நறைபட்ட தொங்க லழகப்ப பூபதி நாமஞ்சொல்லி
முறையிட்ட போதவன் பாரி யெறிந்த முறத்திருகா
தறுபட்டு வீணை யுடைபட்டு நானு மவிடம்விட்டுப்
பறிபட்டு வந்ததென் பாரிமுன் னாட்செய்த பாக்கியமே.

ஊற்றுமலை ஜமீந்தார் மருதப்பத் தேவரவர்களைக் காணவந்த எட்டையபுர முத்துப்புலவரவர்கள் கூறிய கவிகள். இதிற் கலங்கலென்பது ஒரூரெனவறிக.

இலைச்சாருமொதுக்கிடமென்றெண்ணியெண்ணிமிகவுமனமேங்கிவாடித்
தொலைச்சாலுந் தொலையாத கலிக்கோடை வெயிலினின் றுசுழல்வதென்னே
கலைச்சாரந் தெரிபுலவீர் கலங்கலரைக் காதவழி கடந்தா லூற்று
மலைச்சார லுண்டதிலே மருதநிழ லுண்டுவிடாய் மாற்றுந் தானே.

வேளுக்கு வாம்பரியும் வில்லுக்கு நீலமும்போர்
வாளுக்கு நேர்விழியார் வாய்க்குமாமு—நாளு
மருதப் பனையே வளர்த்துவிட்ட தாலே
மருதப் பனைவிரும்பு மான்.

இவ்வெண்பாவில் மூன்றாமடியில், மருது - மருதமாம். அப்பு - நீர். அனை - தாய் எனப்பொருள்கொள்க.

வேளாளராகிய பலபட்டரைச் சொக்கநாதக்கவிராயர் தெருவழியே சென்றபோது, கம்மாளராகிய சுப்பிரதீபக்கவிராயர் காலிற் பாதரக்ஷையிட்டு முன்செல்லுதலைக் கண்டு கூறியது.

சாணாருங் கள்ளுக் குடியார் பணிக்கர்சா ராயமுண்ணார்
கோணாது பாத குறடுசெய் தாற்பெறுங் கூலியல்லால்
நாணாமல் வீதி தொறும்போட்டுச் செல்வது ஞாயமில்லை
வீணா வடாசுப்ர தீபா வஞ்ஞான விளக்கொளியே.

இக்கவிராயரதூர் சிவகங்கை ஜமீனைச்சார்ந்த கடம்பங்குடி என்பர் இவர் அரையிலெப்பொழும் பட்டுடுத்திருந்தமையால் 'பட்டரை' என்னும் அடை இவர்க்கு வழங்கியதாகத் தெரிகின்றது.

அதுகேட்ட சுப்பிரதீபக்கவிராயர் பலபட்டரைக் கவிராயரை நோக்கிப் பாடியது.

தேவைமுத்து ராமலிங்கச் சேதுபதி மீதுவிஞ்சைக்
கோவையென்ற பில்லிவைத்துக் கொன்றாயே—பாவிநீ
யிட்டகவி தான்வசையா யேன்சொன்னாய் சேர்ந்தபல
பட்டரைச் சொக்காமுழுவம் பா.

இக்கவியால், 'விஞ்சைக்கோவை' பலபட்டரைச் சொக்கநாதக்கவிராயர் பாடியதென்பதும், அது முத்துராமலிங்கசேதுபதியைப் பற்றியதென்பதும் நன்குவிளங்கும். சுப்ரதீபக்கவிராயர் விறலிவிடுதூது பாடினவர்.

சுப்பிரதீபக்கவிராயர் இறந்தபோது பலபட்டரைச் சொக்கநாதக்கவிராயர் பாடியது.

செய்ய கொழுநைச் சிவசுப் பிரதிபா
வெய்ய கொழுந்தழலில் வேவதே—ஐயையோ
"நின்மலனார் வெண்ணீற்று நெற்றிக்கண் காணாத
மன்மதன் காண்" என்று சொன்ன வாய்.

இப்பாட்டிற்கண்ட கொழுநை என்பது சிவகங்கை ஜமீனைச்சார்ந்த பையனூரையடுத்ததென்பர். "நின்மலனார்" என்று தொடங்கிய தொடர், விறலிவிடுதூதின்கணுள்ளது.

(இன்னும் வரும்.)

இராமசாமிக்கவிராயர்,
சேற்றூர்ச் சம்ஸ்தான வித்வான்.

புத்தகக் குறிப்பு.

நல்லாசிரியன் (*Trained Teacher*) சென்ற ஜூன்மாதமுதல் சென்னையினின்று வெளிவரும் இம்மாதாந்தரபத்திரத்தின் முதற் பகுதி கிடைக்கப்பெற்று மகிழ்ந்தோம். இப்பத்திரிகை எழுந்ததன் நோக்கம், தமிழ்நாட்டுள்ள பாலாசிரியர்க்கும் பிறர்க்கும் போதனு முறைகளின் விசேடத்தைத் தெளிவுறுத்தி, கல்வியபிவிர்த்திபெற முயல்வதேயாகும். நம் தமிழ்நாட்டிற் சிற்சில பத்திரிகைகள் ஒவ்வொரு பெருவிஷயத்திற்கென்றே தொடங்கப்பட்டிருத்தல்போல, இதுவும் "மாணவரின் கல்வியபிவிர்த்தி" என்னும் இன்றியமையாத பெருநோக்கத்தைக் கொண்டு வெளிவருதலின், தமிழ்மக்களெல்லாம் அபிமானித்தல்வேண்டற்பாலதாம். இதன் முதற் பகுதியில் "சிறுபிள்ளைகளுக்கு உயிரெழுத்துக்கள் போதிக்குமுறை" என்னுந் தலைப்பினுள்ள விஷயம் படங்களுடன் சிறப்பாக எழுதப்பட்டிருக்கின்றது. இன்னும், விடுதலைச்சீட்டு, பெற்றோர் விண்ணப்பம், 'ப்ரோபல்' என்னும் பாலபோதகர் சரித்திரம், ஜர்மனியிலும், சென்னையிலும் இங்கிலீஷ்பாஷை போதிக்கப்படும்முறை முதலிய விஷயங்களும் படிப்போர்க்குப் பயனளிக்கத்தக்கன. நமது அரசாங்கத்தார் விவசாயம், நாட்டுப்படிப்பு இவற்றின் அபிவிர்த்தியிற் கவலைசெலுத்திவரும் இக்காலத்தே, இத்தகைய பத்திரமொன்றுந் துணைபுரிய முன்வந்திருத்தலின், கவர்ன்மெண்டார், இதன்நிலைபேற்றினும் கருணைவைத்தல் நன்மைபயக்கக்கூடியதென்னும் எண்ணமுடையோம்.

ஏகாதசிப்புராணம்:— இஃது யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை ஸ்ரீமத்-நா. சிவசுப்பிரமணியசிவாசாரியரவர்களால் இயற்றப் பெற்றது. இஃது ஏகாதசிவிரதத்தைப்பற்றிய பலகதைகளை எடுத்துரைக்கும் ஓர் புராணமாம். இஃது ஐந்து சருக்கங்களையுடைத்தாய், கூ0உ-செய்யுள்களான் அமைந்தது. யாம், ஆண்டாண்டுப் பார்த்தவிடங்களிற் சொற்பொருணயங்கள் மலிந்திருத்தல் காண்டலால், இதுமுழுதும் நன்கு அமைக்கப்பட்டதொன்றே என்று மகிழ்கின்றேம். இந்நூற்பிரதியொன்றை அன்போடும் எமக்கனுப்பிய இதன்பிரகடனுசிரியர் ஸ்ரீமத்-வீ. அம்பலவாணன் அவர்கட்கு எம் முழுவந்தனமுங் கூறுகின்றேம்.

பத்திராசிரியர்.